விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 197 வள்ளுவர் ஆண்டு 2055 ஆனி 19 புதன்கிழமை (03.07.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## தற்போதைய ஜனாதிபதியின் கீழ்

# தேசிய அரசுக்கு உடன்பட மாட்டோம்

## ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானம்

(கொழும்பு)

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கீழ் தேசிய அரசாங்கத்தை அமைப்பதற்கு ஆதரவளிக்கப் போவதில்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஏகமனதாகத் தீர்மானித்துள்ளனர்.

(02ஆம் பக்கம் பார்க்க)

## லிட்ரோ எரிவாயு விலை குறைப்பு

(கொழும்பு)

நள்ளிரவு முதல் சமையல் எரிவாயு சிலிண்டரின் விலையை குறைக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக லிட்ரோ எரிவாயு நிறுவனம் அறிவித்துள்ளது.

15

## முல்லையில் வீதி விபத்து
### குடும்பஸ்தர் மரணம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாங்குளம் ஏ9 வீதியின் கிழவன் குளம் பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்தில் படுகாயமடைந்த இளம் குடும்பஸ்தர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

பனிக்கன் குளம் மாங்குளத்தைச்

15

## முரல் மீன் தாக்கியதில் இளைஞன் உயிரிழப்பு
### பண்ணைக் கடலில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் மீன் பிடியில் ஈடுபட்டிருந்த இளைஞன் முரல் மீன் தாக்கி உயிரிழந்துள்ளார்.

குருநகர் பகுதியைச் சேர்ந்த மைக்கல்டினோஜன் (வயது-29) எனும் இளைஞனே உயிரிழந்துள்ளார்.

பண்ணை கடலில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு மீன்

15

### ஜனாதிபதியின் பொய், ஏமாற்று நடவடிக்கையால்
## பாராளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமைகள் மீறப்பட்டுள்ளன
### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் குற்றச்சாட்டு



(கொழும்பு)

ஜனாதிபதியின் பொய்கள் மற்றும் ஏமாற்று நடவடிக்கைகளினால் பாராளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமைகள் மீறப்பட்டுள்ளன என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றஞ்சாட்டியுள்ளார்.

சபாநாயகரால் கட்சித் தலைவர்கள்

02

## கடன் மறுசீரமைப்பின் பலாபலன்கள் நாட்டு மக்களைச் சென்றடையும்
### நிதி இராஜாங்க அமைச்சர்

(கொழும்பு)

கடன் மறுசீரமைப்பின் மூலம் கிடைக்கப்பெறும் பலாபலன்கள் நாட்டு மக்களைச் சென்றடையும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார்

கடன் மறுசீரமைப்பு தொடர்பாக நேற்று ஊடகங்

15



## முல்லையில் வீடு புகுந்து வாள்வெட்டுத் தாக்குதல்
### இருவர் படுகாயம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பாலிநகர் பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் படுகாயமடைந்த இருவர் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அதிகாலை 3 மணியளவில் பாலிநகர் பகுதியில் இரு வீடுகளுக்

15

## போலி நாணயத்தாள்கள்
### அவதானமாக இருக்குமாறு பொலிஸார் எச்சரிக்கை

(கொழும்பு)

போலி நாணயத்தாள்கள் தொடர்பில் அவதானமாக இருக்குமாறு பொலிஸார் பொதுமக்களிடம் கேட்டுக் கொண்டுள்ளனர்.

போலி நாணயத்தாள்கள் அச்சிடுவது தொடர்பில் தம் புத்தேகம, கிளிநொச்சி மற்றும் எகொடஉயன ஆகிய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளிலிருந்து தகவல்கள் கிடைத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ள

15

## மருந்துகளுக்கு சில்லறை விலை
### வர்த்தமானி வெளியீடு

(கொழும்பு)

மருந்துகளுக்கு அதிகபட்ச சில்லறை விலையை நிர்ணயிக்கும் வகையில் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலொன்று வெளியிடப்பட்டுள்ளது.

மருந்து விலைகள் மற்றும் முன்னுரிமைக்கமைய அதிகபட்ச சில்லறை

15

## உத்தர பிரதேச மாநிலத்தில் மத நிகழ்வில் கூட்ட நெரிசல்
### பெண்கள் குழந்தைகள் உட்பட 125 பேர் உயிரிழப்பு

(லக்னோ)

இந்தியாவின் உத்தர பிரதேச மாநிலத்தில் இடம்பெற்ற சத்சங்க மத நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை

15



நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### ஜனாதிபதியின் பதவி முடிய முன்

# இனப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும்

## சுமந்திரன் எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி ரணிலின் பதவிக் காலம் முடிய முன்னர் இனப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என சுமந்திரன் எம்.பி தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சம்பந்தனின் மறைவிற்கு இரங்கல் தெரிவித்த ஜனாதிபதிக்கும் எதிர்க்கட்சி தலைவருக்கும் நன்றியைத் தெரிவித்து கொள்வதாகவும் தெரிவித்தார்.

ஜனாதிபதி தானும், சம்பந்தனும் 1977ஆம் ஆண்டு ஒன்றாக பாராளுமன்றத்தில் நுழைந்ததாக குறிப்பிட்டார்.

அத்துடன் தனது ஆயுட்காலத்தின்போது இனப்பிரச்சினை தீர்க்க வேண்டும் என மீண்டும் மீண்டும் குறிப்பிட்டார். ஆனால் துரதிஷ்டவசமாக அவர் இறந்து விட்டார் என ஜனாதிபதி தெரிவித்தார்.

நான் ஜனாதிபதியிடம் மீண்டும் வேண்டுகோள் விடுப்பது என்னவென்றால் ஜனாதிபதியின் பதவிக் காலம் முடிவதற்கு முன்பு இது தீர்க்கப்பட வேண்டும் என நான் வினயமாக நான் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன் என தெரிவித்துள்ளார். (ம-7,10)

# ஆதன உரிமை மாற்ற அறிவித்தல்

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை :- பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகம்
விண்ணப்பதாரரின் பெயர் :-

01. இராசேந்திரம் சிவனேஸ்வரனும் பெண் துஸ்யந்தியும்
02. கிட்டினன் மகேஸ்வரனும் பெண் இராசலட்சுமியும்
03. யோசேப்பு அருமைநாயகமும் பெண் செல்லக்கிளி இராசேஸ்வரியும்
04. விஜயகுமார் பெண் சுபாசினி
05. கணேசன் கேதீஸ்வரனும் பெண் யோகவதனியும்

சபை ஆதனவரி பதிவேட்டின் படி பெயர் :- ——————
முகவரி:
வீதி :- உயரப்புலம் மாரீசன்கூடல் வீதி, வட்டாரம் :- 02

வட்டாரம் 2, உயரப்புலம் மாரீசன்கூடல் வீதியில் அமைந்துள்ள உறுதியின் பிரகாரம் வட மாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் தென்மேற்குப் பகுதி பண்டத்தரிப்பு கோவிற்பற்று பெரியவிளான் இறை உயரப்புலம் எனும் பெயருடைய நிலப்பரப்பு பத்தும் குழி மூன்று தசம் ஆறு மூன்று விஸ்தீரணமான ஆதனம் ஆரம்பத்தில் இளவாலையைச் சேர்ந்த அருட்சகோதரி ஸ்ரீபன் என்பவருக்கு சொந்தமாக இருந்தது எனவும் அவர் இந்த ஆதனத்தை எவருக்கும் சன்மானம் செய்யாது சுயாதீனமாக ஆட்சி செய்து வருவதன் காரணமாக இவ்வாதனத்திற்கு ஆட்சியுரிமை பெற்றுள்ளதாக 1960-ஆம் ஆண்டு இளவாலை புனித அன்னம்மாள் ஆலயத்திற்கு நன்கொடையாக வழங்கினார் எனவும் யாழ் கத்தோலிக்க ஆயர் அதி வணக்கத்துக்குரிய டாக்டர் ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் அவர்களால் வெளிப்படுத்தி பிரசித்த நொத்தாரிசு E.T அன்ரன் பாலசிங்கம் அவர்களால் 6566ம் இலக்க 27.12.2017ம் திகதிய உறுதி எழுதப்பட்டுள்ளது. பின்னர் இவ் ஆதனம் பிரசித்த நொத்தாரிசு J.S.A.மதுரநாயகம் அவர்களால்

01. 5622ம் இலக்க 06.03.2020ம் திகதிய உறுதி மூலம் யாழ்ப்பாணம் வித்தகபுரம் நவக்கிரி எனும் இடத்தை சேர்ந்த யோசேப்பு அருமைநாயகமும் பெண் செல்லக்கிளி இராசேஸ்வரியும்
02. 5621ம் இலக்க 06.03.2020ம் திகதிய உறுதி மூலம் இளவாலை உயரப்புலம் எனும் இடத்தைச் சேர்ந்த இராசேந்திரம் சிவனேஸ்வரனும் துஸ்யந்தியும்
03. 6891ம் இலக்க 03.11.2021 திகதிய உறுதி மூலம், ஆனைக்கோட்டை உயரப்புலம் எனும் இடத்தைச் சேர்ந்த கணேசன் கேதீஸ்வரனும் பெண் யோகவதனியும்
04. 7495ம் இலக்க 19.07.2022ம் திகதிய உறுதி மூலம் இளவாலை உயரப்புலம் எனும் இடத்தைச் சேர்ந்த விஜயகுமார் பெண் சுபாசினி
05. 5623ம் இலக்க 06.03.2020ம் திகதிய உறுதி மூலம் இளவாலை உயரப்புலம் எனும் இடத்தைச் சேர்ந்த கிட்டினன் மகேஸ்வரனும் பெண் இராசலட்சுமியும்

என்பவர்களுக்கு அறுதி விற்கப்பட்டுள்ளது.

**ஆதன விபரம்**

உத்தரவு பெற்ற நில அளவையாளர் A.கந்தசாமி அவர்களால் 2014.03.11 அளந்து தயாரிக்கப்பட்ட 1549ம் இலக்க நில அளவைப்படத்தில் துண்டு 1,2,3,4,5,6 எனச் சுட்டப்பட்ட துண்டுகளாகிய நிலப்பரப்பு பத்தும் குழி மூன்று தசம் ஆறு மூன்றும் மற்றும் அதற்குச் சேர்ந்தவைகளும் பின்வருமாறு விற்கப்பட்டுள்ளது.

Lot 1 எனக் குறிப்பிடப்பட்ட நிலப்பரப்பு 2ம் இராசேந்திரம் சிவனேஸ்வரனும் பெண் துஸ்யந்தியும் என்பவர்களுக்கும், Lot 2 எனக் குறிப்பிடப்பட்ட நிலப்பரப்பு 2ம் கிட்டினன் மகேஸ்வரன் பெண் இராசலட்சுமி என்பவர்களுக்கும் Lot 3 எனக் குறிப்பிடப்பட்ட நிலப்பரப்பு 2 குளி 16.50ம் யோசேப்பு அருமைநாயகம் பெண் செல்லக்கிளி இராசேஸ்வரி என்பவர்களுக்கும் Lot 4 எனக் குறிப்பிடப்பட்ட நிலப்பரப்பு 1 குளி 12.52ம் Lot 6 பாதை குளி 5.71ம் விஜயகுமார் பெண் சுபாசினி என்பவரு க்கும் Lot 5 எனக் குறிப்பிடப்பட்ட நிலப்பரப்பு 1 குளி 4.90ம் கணேசன் கேதீஸ்வரன் உம் பெண் யோகவதனி என்பவர்களுக்கும் உரித்துடையதாகும்.

மேற்குறித்த ஆதனத்தை ஆதன இல 350,350A என்பன யோசேப்பு அருமைநாயகமும் பெண் செல்லக்கிளி இராசேஸ்வரிக்கும், ஆதன இல 354 ஆனது கிட்டினன் மகேஸ்வரனும் பெண் இராசலட்சுமிக்கும் ஆதன இல 348 ஆனது கணேசன் கேதீஸ்வரனும் பெண் யோகவதனிக்கும், ஆதன இல 348/1 ஆனது விஜயகுமார் பெண் சுபாசினிக்கும், ஆதன இல 356 ஆனது இராசேந்திரம் சிவனேஸ்வரனும் உம் பெண் துஸ்யந்திக்கும் என்ற பெயரில் சபையின் ஆதன பதிவேட்டில் பதிவு செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ ஆட்சேபனையை தெரிவிக்குமாறும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரிகளின் பெயருக்கு சபையின் ஆதன பதிவேட்டில் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இந்த ஆதன பெயர் பதிவு செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

செயலாளர்,
வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,
மானிப்பாய். (1377)

# அமெரிக்கப் பிரதிநிதியுடன் எதிர்க்கட்சித் தலைவர் சந்திப்பு



அமெரிக்க திறைசேரியின் ஆசியாவிற்கான பிரதி உதவி செயலாளர் ரொபர்ட் கப்ரோத் நாட்டுக்கு வருகை தந்துள்ள நிலையில், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை சந்தித்து கலந்துரையாடினார்.

இச்சந்திப்பில் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங், ஐக்கிய அமெரிக்காவை பிரதிநிதித்துவப்படுத்தி Mr. Andrew Shinn ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது இரு தரப்பினரும் பொருளாதார, சமூக மற்றும் அரசியல் விவகாரங்கள் குறித்து பல்வேறு கருத்துகளை பரிமாறிக் கொண்டனர்.

விசேடமாக அரசாங்கத்தின் வரிக் கொள்கையினால் நாட்டு மக்கள் எவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர் என்பது தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இங்கு தெளிவூட்டினார்.

மேலும், தேர்தல்கள் தொடர்ச்சியாக ஒத்தி வைக்கப்படுவதன் மூலம் மக்களின் ஜனநாயக உரிமைகள் எவ்வாறு மீறப்பட்டுள்ளன என்பது தொடர்பாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அமெரிக்க திறைசேரி திணைக்களத்தின் ஆசியாவிற்கான பிரதி உதவிச் செயலாளரிடம் கருத்து வெளியிட்டார்.

இச்சந்திப்பில், ஐக்கிய மக்கள் சக்தியைப் பிரதிநிதித்துவப்படுத்தி, பாராளுமன்ற உறுப்பினர்களான கலாநிதி ஹர்ஷ டி சில்வா, கபீர் ஹாசிம், மனோ கணேசன், ரவூப் ஹக்கீம், இராதாகிருஷ்ணன், நிரோஷன் பெரேரா மற்றும் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர். (ம-7,10)

### எரிபொருள் விலை குறைக்கப்பட்டாலும்

# பாடசாலை வான் சேவை கட்டணம் குறைக்கப்படாது

அண்மைய எரிபொருள் விலை திருத்தத்தில் ஓட்டோ டீசலின் விலையில் மாற்றம் செய்யாததால் தம்மால் கட்டண திருத்தத்தை மேற்கொள்ள முடியாது என அகில இலங்கை பாடசாலை மாணவர் போக்குவரத்து சங்கம் நேற்று அறிவித்துள்ளது.

தற்போதைய பொருளாதார நிலைமை காரணமாக வாகனங்களை பராமரிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக சங்கம் தெரிவித்துள்ளது.

எனவே, பாடசாலை மாணவர்களை தொடர்ந்து ஏற்றிச் செல்வதற்கு அரசாங்கம் கடனுதவி வழங்குமாறு சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

மாணவர்களை சரியான நேரத்தில் பாடசாலைக்கு பாதுகாப்பாகவும் வசதியாகவும் அழைத்துச் செல்வதை உறுதி செய்யும் வகையில் தொழிற்சங்கம் செயல்படுவதால், இந்த விஷயத்தில் அரசு கவனம் செலுத்த வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7,10)

### பாராளுமன்ற...

கூட்டம் நடத்தப்பட்டு ஒழுங்குப் பத்திரம் தயாரிக்கப்பட்டாலும், இந்தக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில், தவறான தகவல், பொய், கண்துடைப்பு, ஏமாற்று அடிப்படையில் ஒழுங்குப் பத்திரம் தயாரிக்கப்பட்டுள்ளது.

தான் அடங்கலாக பாராளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமைகள் இதனால் மீறப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

கடன் தரப்பினரோடு ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டுள்ளதாக ஜனாதிபதி கூறினால், ஒப்பந்தத்தின் நகலை சமர்ப்பியுங்கள்.

அப்போது உண்மையின் அடிப்படையில் பாராளுமன்றத்தின் ஒழுங்குப் பத்திரத்தை தயாரிக்க முடியும். இங்கு பாரிய தவறு இழைக்கப்பட்டு, சிறப்புரிமைகள் இழக்கப்பட்டுள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

பாராளுமன்றத்தின் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் பொய், ஏமாற்றுதல், பொய்ப் பிரசாரம் ஆகியவற்றின் அடிப்படையில் பாராளுமன்றத்தின் ஒழுங்குப் பத்திரம் தயாரிக்கப்படுமாக இருந்தால், அது ஒரு ஆபத்தான விடயமாகும். பாராளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமைகளை பாதுகாக்க இருக்கும் சபாநாயகரே இதற்கு பொறுப்புக் கூற வேண்டும். ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டுள்ளதாக நாட்டுக்கு கூறினாலும், கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் ஜனாதிபதி இன்னொன்றை தெரிவிக்கிறார். இது பாராளுமன்றத்துக்கும் நாட்டுக்கும் பொய்யுரைக்கும் செயல் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார். (ம-7,10)

### தேசிய...

பாராளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரனவினால் நேற்று முன்வைக்கப்பட்ட இந்த யோசனைக்கு கட்சியின் பாராளுமன்றக் குழு ஏகமனதாக அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இலங்கையில் ஜனாதிபதித் தேர்தல் ஒன்று எதிர்வரும் ஒக்டோபர் மாதத்துக்குள் நடத்தப்படவேண்டும் என்பது அரசியலமைப்பின் நியதியாகும்.

இருந்தபோதும், யார் போட்டியிட்டாலும் 51 வீத வாக்குகளை பெறமுடியுமா என்றசந்தேகம்ஏற்பட்டுள்ளது.

இதன்காரணமாக அரசியலமைப்பில் உள்ள சில விதிகளை பயன்படுத்தி தேர்தலை பிற்போடுவதற்கான முனைப்புக்கள் குறித்து ஏற்கனவே செய்திகளும் வெளியாகிக் கொண்டிருக்கின்றன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு பொதுஜன பெரமுனவின் ஆதரவு கிடைக்கும் அல்லது கிடைக்காது என்ற அடிப்படையில் இதற்கான முனைப்பு மேற்கொள்ளப்படுகிறது.

அதேநேரம் தமிழ் தரப்பில் பொதுவேட்பாளர் ஒருவர் களமிறங்கினாலும் ரணிலுக்கு அது பாதகமாகவே இருக்கும்.


எனவே மாற்று யோசனையாக அனைத்துக்கட்சிகளும் இணைந்த தேசிய அரசாங்கம் ஒன்று தொடர்பிலும் யோசனை ஒன்று முன்வைக்கப்படலாம் என்று பேசப்படுகிறது. இந்த நிலையிலேயே நேற்று ஐக்கிய மக்கள் சக்தி தமது நிலைப்பாட்டை அறிவித்துள்ளது.

நேற்று காலை பாராளுமன்றத்தில் நடைபெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற குழுக் கூட்டத்தில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (ம-7,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மடு அன்னைக்கு முடி சூட்டிய நூற்றாண்டு விழா





(மன்னார்)

மருதமடு அன்னைக்கு முடி சூட்டிய நூற்றாண்டு விழாவும் ஆடித் திருவிழா திருப்பலியும் நேற்று செவ்வாய்க்கிழமை காலை மன்னார் மறை மாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் கொழும்பு மறைமாவட்ட பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை மற்றும் குருநாகல் மறைமாவட்ட ஆயர் கலாநிதி ஹரோல்ட் அந்தோனி பெரேரா ஆகியோர் இணைந்து கூட்டுத் திருப்பலி ஒப்புக்கொடுத்தனர்.

அதனைத் தொடர்ந்து மடு அன்னைக்கு முடி சூட்டும் நிகழ்வு இடம்பெற்றது.

அருட் தந்தையர்கள் ,அருட் சகோதரர்கள், வடமாகாண ஆளுநர், அரசியல் பிரமுகர்கள் திணைக்களத்தலைவர்கள் உள்ளடங்கலாக சுமார் 7 லட்சத்திற்கும் அதிகமான பக்தர்கள் கலந்து கொண்டனர். (நி-6-285)

## பேச்சுவார்த்தையில் சாதகமான தீர்வு

### பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்கள்

(கொழும்பு)

தமது கோரிக்கைகள் தொடர்பில் உரிய அதிகாரிகளுடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தை வெற்றியளித்துள்ளதாக பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் ஒண்றிணைந்த தொழிற்சங்கம் அறிவித்துள்ளது.

பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவுடன் நேற்றுமுன்தினம் கலந்துரையாடல் ஒன்றை முன்னெடுத்திருந்தனர். இக் கலந்துரையாடலில் சாதகமான தீர்வு எட்டப்பட்டதாக பல்கலைக்கழக தொழிற்சங் கங்களின் கூட்டுக் குழுவின் இணைத் தலைவர் தம்மிக்க எஸ். பிரியந்த தெரிவித்துள் ளார்.

சம்பளத்தில் 15 வீத வற் வரி அறவிடப்படுவது மற்றும் கல்விசாரா ஊழியர்களின் மாதாந்த கொடுப்பனவு அதிகரிக்கப்படாதமைக்கு எதிர்ப்பு தெரிவித்து கடந்த 2 மாதங்களாக பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்கள் பணி பகிஷ்கரிப்பு போராட்டத்தினை முன்னெடுத்திருந் தனர்.

இதன்காரணமாக 17 அரச பல்கலைக்கழகங்கள் மற்றும் 17 உயர்கல்வி நிறுவனங்களின் செயற்பாடுகள் கடந்த 2 மாதங்களாக பாதிக்கப்பட்டிருந்தன.

மேலும் பல்கலைக்கழக கட்டமைப்பில் உள்ளக மற்றும் வெளிவாரியாக கல்வி கற்கும் சுமார் 2 இலட்சம் மாணவர்கள் நெருக்கடியை எதிர்நோக்கியிருந்ததுடன் கற்றல் நடவடிக்கைகள் மற்றும் பரீட்சைகள் ஒத்திவைக்கப்பட்டிருந்தன.

இதேவேளை தங்களது கோரிக்கைக்கு சாதகமான தீர்வு முன்வைக்கப்பட்டுள்ள நிலையில் விரைவில் பல்கலைக்கழக கல்வி நடவடிக்கைகளை வழமைக்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தொழிற் சங்கத்தினர் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## இந்தியா செல்ல தயாராகும் சஜித்

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னதாக இந்தியாவுக்கு விஜயம் செய்ய தயாராகி வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டார, இதனை நேர்காணல் ஒன்றின் போது தெரிவித்துள்ளார்.

இதற்கான அழைப்பிதழ் கிடைத்துள்ளதாக தெரிவித்துள்ள அவர், குறித்த பயணம் திட்டமிட்டு தீர்மானிக்கப்படும் என்றும் தெரிவித்தார்

தேர்தலுக்கு முன்னதாகவே இந்த விஜயம் இடம்பெறும் என வலியுறுத்திய பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்து மபண்டார, தேர்தலுக்குப் பின்னர் செல்வதில் அர்த்தமில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் இந்த அழைப்பிதழ் யாரிடம் இருந்து கிடைத்துள்ளது மற்றும் பயணத்தின் போது, சஜித் எந்த முக்கியஸ்தர்களை சந்திக்கவுள்ளார் என்ற தகவல்களை அவர் வெளிப்படுத்தவில்லை.(நி-6)

# 9 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர்.திரு. தயாநிதி கஜேந்திரன் (ராஜா)



**திதி வெண்பா**

**ஆண்டு மன்மத ஆனிமாதத் திங்கள் அன்று**
**காண்தகு அமரபக்கத் திரியோதசி திதி தன்னில்**
**கஜேந்திரன் சென்றனன் விண்ணுலகம் எமை**
**மீளாத் துயரில் ஆழ்த்தி**

ஆடிப்பாடி மழலை மொழி பேசி
அனைவருக்கும் அன்பானவனாய்
நீ ஓடித்திரிந்த வீதிகள் உன்னைத்
தேடித்தேடி வாடிக்கிடக்குதடா!
நீ ஆசையாய் வளர்த்த வாசம் வீசும் மலர்ச்செடிகள்
வாசம் இன்றி உன் வருகைக்காய்
காத்துக் கிடக்குதடா!
அன்பாய் உன்னை ராஜா என்று அழைத்த எம் உதடுகள்
ஒருமுறையாவது உன்னுடன்
அளவளாவிச் சிரித்திட ஏங்கித் தவிக்குதடா!
வந்து விடடா கண்மணியே
உன்னை எண்ணித் தினம் தினம்
தவிக்கிறோமடா எம் ராஜாவே!

இந்திர பிரஸ்தம்,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

உன் நினைவுடன் வாழ்ந்து கொண்டிருக்கும்
குடும்பத்தினர்.


(சி-725)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# யூரோ கிண்ண கால்பந்து
## காலிறுதிக்கு ஸ்பெயின், பிரான்ஸ் தகுதி



"யூரோ" கிண்ண கால்பந்து காலிறுதிக்கு ஸ்பெயின், பிரான்ஸ் அணிகள் முன்னேறின.


ஜேர்மனியில், ஐரோப்பிய கால்பந்து சம்பியன்ஷிப் ("யூரோ" கிண்ணம்) நடக்கிறது. இதுவரை ஜெர்மனி, இங்கிலாந்து, சுவிட்சர்லாந்து அணிகள் காலிறுதிக்கு முன்னேறின. இதன் "ரவுண்டு-16" போட்டியில் உலகின் "நம்பர்-8" ஸ்பெயின் அணி, 74 ஆவது இடத்தில் உள்ள ஜார்ஜியாவை எதிர்கொண்டது. ஆட்டத்தின் முதல் பாதி 1-1 என சமநிலையில் இருந்தது.

இரண்டாவது பாதியில் ஆதிக்கம் செலுத்திய ஸ்பெயின் அணிக்கு பேபியான் (51ஆவது நிமிடம்), வில்லியம்ஸ் (75 ஆவது), டேனியல் ஆல்மோ (83 ஆவது) தலா ஒரு கோல் அடித்து கைகொடுத்தனர். கடைசி வரை போராடிய ஜார்ஜியா அணியினரால் கோல் அடிக்க முடியவில்லை. ஆட்டநேர முடிவில் ஸ்பெயின் அணி 4-1 என்ற கணக்கில் வெற்றி பெற்றது.

டுசெல்டோர்ப்பில் நடந்த மற்றொரு "ரவுண்டு-16" போட்டியில் பிரான்ஸ், பெல்ஜியம் அணிகள் மோதின. முதல் பாதி கோல் எதுவுமின்றி சமநிலையில் இருந்தது. இரண்டாவது பாதியின் 85 ஆவது நிமிடத்தில் பெல்ஜியத்தின் ஜான் வெர்டோங்கன் "சேம்சைடு" கோல் அடித்து ஏமாற்றினார். முடிவில் பிரான்ஸ் அணி 1-0 என வெற்றி பெற்று காலிறுதிக்கு முன்னேறியது.

ஸ்டட்கர்ட்டில் நாளை மறுதினம் நடக்கவுள்ள காலிறுதியில் ஸ்பெயின், ஜெர்மனி அணிகள் மோதுகின்றன. (நி-6)

# மீண்டும் இணையும் கூட்டணி
## கார்த்திக் புதிய அவதாரம்




பெங்களூர் அணியின் பட்டிங் பயிற்சியாளர், ஆலோசகராக தினேஷ் கார்த்திக் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்திய அணியின் முன்னாள் விக்கெட்கீப்பர் பட்டர் தினேஷ் கார்த்திக், 39. சமீபத்தில் அனைத்துவித கிரிக்கெட்டில் இருந்தும் ஓய்வு பெற்றார். கடந்த முறை ஐ.பி.எல். தொடரில் பெங்களூர் அணிக்காக "பினிஷர" பணியை கச்சிதமாக செய்தார்.

சமீபத்திய "ரி-20" உலக கிண்ணத் தொடரில் வர்ணனையாளராக அசத்தினார். தற்போது பெங்களூர் அணியின் பட்டிங் பயிற்சியாளர், ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இது குறித்து தமிழகத்தை சேர்ந்த தினேஷ் கார்த்திக் கூறுகையில், "கிரிக்கெட் வாழ்க்கையில் புதிய அத்தியாயத்தை துவங்குவதில் மகிழ்ச்சி. பெங்களூர் அணிக்கு பட்டிங் பயிற்சி அளிக்க ஆர்வமாக உள்ளேன். பதட்டமான கட்டத்தில் சிறப்பாக செயற்படும் வித்தையை கற்றுக்கொடுக்க இருக்கிறேன். எனது அனுபவம், அணியின் வளர்ச்சிக்கு கை கொடுக்கும்,"என்றார்.

கடந்த 17 ஆண்டுகளாக போராடும் பெங்களூர் அணியால், கிண்ணத்தை வெல்ல முடியவில்லை என்றார்.

புதிய அவதாரம் எடுக்கும் கார்த்திக்கின் வரவு, கோலி கூட்டணிக்கு அதிர்ஷ்டத்தை கொண்டு வருமா என ரசிகர்களிடையே கவனத்தை செலுத்தி கருத்துப் பகிர்வு இடம்பெறுகின்றது. (நி-6)

## 'பெரில்' புயலில் சிக்கி தவிக்கும் இந்திய வீரர்கள்

பார்படாசில் புயல் மழையுடன் சூறாவளி காற்று வீசுவதால், இந்திய வீரர்கள் தாயகம் திரும்புவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

பார்படாஸ் தீவில் நடந்த "ரி-20" உலக கிண்ண பைனலில் இந்திய அணி, தென்னாபிரிக்காவை வீழ்த்தியது. கிண்ண வென்ற இந்திய வீரர்கள் நேற்று முன்தினம் காலை 11 மணிக்கு பார்படாஸ் விமான நிலையத்தில் இருந்து நியூயோர்க் புறப்பட இருந்தனர்.

இந்தச் சூழலில், அட்லாண்டிக் பெருங்கடலில் உருவான "பெரில்"புயல் தீவிரமடைந்தது. "பிரிவு-4" வகையை சேர்ந்த புயல் என்பதால், மணிக்கு 210 கி.மீ. வேகத்தில் சூறாவளி காற்று வீசுகிறது. "உயிருக்கு ஆபத்து ஏற்படுத்தும் தீவிர புயல" என எச்சரிக்கை விடுக்கப்பட்டிருப்பதால், பார்படாசின் கிரான்ட்லி ஆடம்ஸ் சர்வதேச விமான நிலையம், அலுவலகம், கடைகள் மூடப்பட்டு ஊரடங்கு போல் நிலைமை உள்ளது.

தண்ணீர், மின் விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளது. பலத்த மழை பெய்து வருவதால், சாலையில் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. பெரும்பாலான மக்கள் அருகில் உள்ள பள்ளிகளில் தஞ்சம் அடைந்துள்ளதுடன் இந்திய வீரர்களும் பார்படாசின் "ஹில்டன் ஹோட்டலில்" முடங்கியுள்ளனர். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழைநீர் சேகரிப்புத் தாங்கிகள்
## அமைப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம்

**(கொழும்பு) இந்திய அரசாங்கத்தினால் யாழ். மாவட்டத்தில் 934 மழைநீர் சேகரிப்புத் தாங்கிகளை அமைப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது.**

யாழ்.மாவட்டத்திற்கு சுத்தமான குடிநீரை வழங்குவதற்காக இந்திய அரசினால் வழங்கப்பட்ட நிதியைப் பயன்படுத்தி மாவட்டத்தில் 3,000 மழைநீர் சேகரிப்புத் தொட்டிகளை அமைப்பதற்கு இந்திய அரசாங்கத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்கு 25.10.2016 அன்று அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

மூன்று ஆண்டுகளில் இத்திட்டம் முடிக்கப்படவிருந்தது ஆனால் நிதி மற்றும் தொழில்நுட்ப சிக்கல்கள் காரணமாக, திட்ட காலம் ஜூன் 2024 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

மேலும் இத்திட்டத்தின் கீழ் மீதமுள்ள நிதியில் 934 மழைநீர் சேகரிப்புத் தொட்டிகளை அமைக்க நீதி, சிறைத்துறை மற்றும் அரசியல-மைப்பு சீர்திருத்த அமைச்சர் முன்வைத்த முன்மொழிவுக்கு அமைச்சர்கள் குழு ஒப்புதல் அளித்துள்ளது. (நி-6)

# பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக பண்பாட்டு விழா இன்று

(கிளிநொச்சி)
வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகமும் பச்சிலைப் பள்ளி கலாசார பேரவையும் இணைந்து நடத்தும் பண்பாட்டு விழா இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு கிளி/பளை மத்திய கல்லூரி ஆருக்ஷ் கிருத்திக் கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

கலாசார பேரவையின் தலைவரும் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளருமான இ.த.ஜெயசீலன் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட பதில் அரச அதிபர் சு.முரளிதரன், சிறப்பு விருந்தினராக வடமாகாண பண்பாட்டலுவல் அலகின் பணிப்பாளர் திருமதி.லாகினி நிருபராஜ், கௌரவ விருந்தினர்களாக கிளி/பளை மத்திய கல்லூரி அதிபர் குமாரசாமி ரவீந்திரா மற்றும் தம்பகாமம் அண்ணாவியார் கலாபூஷணம் கந்தையா ஆறுமுகம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.(நி-6)

# இசைப்பேழை வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)
அச்சுவேலி காட்டுவளவு கந்தசுவாமி மீது பா. அர்ச்சனாவால் எழுதிப் பாடப்பட்ட அர்ச்சனைப் பூக்கள் என்ற இசைப்பேழை வெளியீட்டு விழா இன்று புதன்கிழமை இரவு 9.15 மணிக்கு காட்டுமலை கந்தசுவாமி ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது.

மன்னார் வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஞான. ஆதவன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் ஆசிரியர் கலாசாலை முதல்வர் ச.லலீசனும் சிறப்பு விருந்தினர்களாக முன்னாள் அதிபர் ச. சத்தியவரதன், இலங்கை திறந்த பல்கலைக்கழக விரிவுரையாளர் தயாளினி குமாரசாமி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (நி-6-33)

# இ.போ.ச சாரதி மீது மாங்குளத்தில் தாக்குதல்

(சாவகச்சேரி)
யாழில் இருந்து வவுனியா நோக்கிச் சென்ற இ.போ.ச பேருந்தின் சாரதி மீது மாங்குளம் பகுதியில் நேற்று திங்கட்கிழமை காலை இரும்புக் கம்பியால் தாக்குதல் நடத்தப்பட்டதில் சாரதி படுகாயமடைந்துள்ளார்.

மாங்குளம் சந்தியில் பயணிகளை இறக்கிக் கொண்டிருந்த சமயத்தில் தனியார் பேருந்துத் தரப்பினர் மேற்படி தாக்குதலை மேற்கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதில் காயமடைந்த இ.போ.ச சாரதி மாங்குளம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.(நி-6-30)

# நாட்டை வந்தடைந்தார் மகிந்த ராஜபக்ஷ

(கொழும்பு)
சீனாவுக்கு நான்கு நாட்கள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்ட முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாட்டை வந்தடைந்தார்.

இவர் நேற்று முன்தினம் இரவு 11.10 மணியளவில் சிங்கப்பூரிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார்.

இவர் கடந்த 28ஆம் திகதி சீனாவின் பீஜிங்கில் நடைபெற்ற அமைதியான சக வாழ்வுக்கான ஐந்து கோட்பாடுகளின் 70ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் நினைவேந்தல் நிகழ்வில் கலந்து கொண்டு மீண்டும் நாட்டிற்கு திரும்பியுள்ளார்.

இதன் போது முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கருத்து தெரிவிக்கையில்,

சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் மற்றும் சீன வெளிவிவகார அமைச்சர் வாங் யீ ஆகியோருடன் பேச்சு வார்த்தை இடம் பெற்றது.இலங்கையின் வளர்ச்சிக்கு சீன அரசாங்கம் தொடர்ந்தும் பங்களிப்பை வழங்கும் எனவும் அவர் தெரிவித்தார். (நி-6)

# பொருளாதார உருமாற்ற சட்டமூலத்தின் பல சரத்துகள் அரசியலமைப்பிற்கு முரணானது
## சபாநாயகர் தெரிவிப்பு

(கொழும்பு)
பொருளாதார உருமாற்ற சட்டமூலத்தின் பல சரத்துகள் அரசியலமைப்பிற்கு முரணானது என உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளதாக சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன நேற்று பாராளுமன்றில் தெரிவித்துள்ளார்.

அதன்படி, சட்டமூலம் பாராளுமன்றத்தின் சிறப்பு பெரும்பான்மையால் மட்டுமே நிறைவேற்றப்பட வேண்டும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாக சபாநாயகர் தெரிவித்தார்.

எனினும் அந்த சரத்துகள் திருத்தப்பட்டால் தனிப் பெரும்பான்மையுடன் நிறைவேற்ற முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளதாக சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன மேலும் குறிப்பிட்டுள்ளார். (நி-6)

# இராசிபலன்

03.07.2024
ஆனி 19, புதன்கிழமை
துவாதசி முற்பகல் 7.46 மணிவரை

ரோகிணி பின்னிரவு 5.02 மணிவரை
சுபநேரம் 4.27-5.57 மணி வரை
இராகுகாலம் 11.57-1.27 மணிவரை

பிரதோச விரதம்
சந்திராஷ்டமம்- அத்தம்

வளவன்



சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், பணப் புழக்கம் அதிகரிக்கும் நாள், வாக்கு மேன்மையுண்டு.



பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், குடும்ப உறவுகளிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும், காரிய அனுகூலமுண்டு.



அடுத்தவர் விவகாரங்களில் தலையிடுவதை தவிர்ப்பது நல்லது, துயரங்கள் தீர பரம் பொருளை வழிபட வேண்டிய நாள், மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும்.



புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு, இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், தேவைகள் பூர்த்தியாகும்.



வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், திட்டமிட்ட காரியத்தில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், பல நாட்களாக சந்திக்காத நபர் ஒருவரைச் சந்திக்கும் வாய்ப்புண்டு.



செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், செல்வாக்கு மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு.



தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள் தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.



பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், மனதில் தோன்றுவதை செய்வீர்கள், போசன சுகமுண்டு, நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர்.



சுப காரிய செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், குடும்ப பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது.



தொழிலில் இருந்த எதிர்ப்புகள் விலகும், சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.



இனத்தின் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும், கடன் பிரச்சினைகளை சமார்த்தியமாகச் சமாளிப்பீர்கள், உடல் நலன் சீராகும், காரிய அனுகூலமுண்டு.



பொது நல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், உறவினர்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

சிக்கனமும் சேமிப்பும் வாழ்க்கையின் தரத்தை உயர்த்தும்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



திருத்துவ சின்னஞ் சிறுசுகள் வருடாந்த கண்காட்சி நிகழ்வு கடந்த மாதம் குருநகர் முன்பள்ளி வளாகத்தில் யூலி எமிலியானூஸ் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி.ஜானகி தர்மஜீலன் கலந்து கொண்டார்.

## மருத்துவமனை கண்ணாடி சேதம்

### இருவர் கைது

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின் உடைமைக்கு சேதம் விளைவித்த இருவர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை சாவகச் சேரிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு மருத்துவமனையில் இருந்த நண்பரை பார்வையிடச் சென்ற இருவரே மருத்துவமனையில் இருந்த கண்ணாடியை உடைத்து சேதப்படுத்திய குற்றச்சாட்டில் கைதாகியுள்ளனர். (நி-6-30)

## 'சீல்' வைக்கப்பட்ட உணவகம்

(யாழ்ப்பாணம்)

யாழில் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கி வந்த உணவகம் ஒன்றிற்கு சீல் வைக்க உத்தரவிட்ட நீதிமன்று உணவகத்திற்கு 90 ஆயிரம் ரூபாய் தண்டமும் விதித்துள்ளது.

யாழ்.மாநகர சபையின் ஆளுகைக்கு உட்பட்ட பகுதியில் உள்ள உணவகம் ஒன்றில் பொதுச்சுகாதார' பரிசோதகர்கள் திடீர் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

பொதுச்சுகாதார பரிசோதகர்களால் கடந்த முறை அறிவுறுத்தப்பட்ட அறிவுறுத்தல்களை செய்யாதமையைத் தொடர்ந்து சுகாதார சீர்கேட்டுடன் உணவகத்தினை நடத்திச் சென்றமையை கண்டறிந்த பொதுச் சுகாதார பரிசோதகர்கள் உணவக உரிமையாளருக்கு எதிராக யாழ்.மேலதிக நீதிவான் நீதிமன்றில் வழக்கு தொடர்ந்தனர்.

குறித்த வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வேளை உரிமையாளர் குற்றத்தை ஏற்றுக்கொண்டதை அடுத்து , திருத்த வேலைகள் முடிவடையும் வரையில் உணவகத்தை சீல் வைத்து மூட உத்தரவிட்ட மன்று 90 ஆயிரம் ரூபாய் தண்டமும் விதித்தது. (நி-6-33)

## சியெட் களனி இரட்டை விருதுகளை வென்றது



இலங்கை தேசிய வர்த்தக சம்மேளனம் (NCCSL) வழங்கிய தேசிய வர்த்தக சிறப்பு விருதுகள் 2024 இல் சியெட் களனி ஹோல்டிங்ஸ் (CEAT Kelani Holdings) கௌரவமிக்க இரட்டை விருதுகளை வென்றது. இது நாட்டின் முன்னணி உற்பத்தி வெற்றிக் கதைகளில் ஒன்றாக நிறுவனத்தின் நிலையை மீள உறுதிப்படுத்தியது.

இலங்கையின் நியூமேடிக் டயர் தேவைகளில் பாதியை உற்பத்தி செய்யும் நிறுவனமான சியெட் களனி "உற்பத்தி - ஏனையவை பிரிவில்" தேசிய வர்த்தக சிறப்பு விருதை (NBEA) வென்றதுடன் மற்றும் நிறுவனத்தின் வெற்றியின் அங்கீகாரமாக, உள்நாட்டு சந்தையில் சிறந்து விளங்குவதற்கான கட்டளைகள் விதிகளுக்கான விருதையும் வென்றது. இந்த விருதுகளுக்காக மதிப்பிடப்பட்ட காலகட்டத்தில் நிலவிய சவாலான நிலைமைகளை எதிர்கொண்டு வெற்றி பெற்றமைக்கான அங்கீகாரமாக இந்த விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

இது குறிப்பிடத்தக்க வகையில், சியெட் களனி ஹோல்டிங்ஸ் ஆனது வர்த்தகச் சிறப்புக்காக NCCSL ஆல் அங்கீகரிக்கப்பட்ட ஐந்தாவது சந்தர்ப்பமாகும்.

தொழில் மற்றும் வர்த்தகத்திற்கான குறிப்பிடத்தக்க சவாலான காலகட்டத்தில், பெரும்பாலான நிறுவனங்கள் செலவுகளைக் குறைப்பதிலும் சந்தைப் பங்குகளைத் தக்க வைத்துக் கொள்வதிலும் கவனம் செலுத்திய நிலையில் சியெட் களனி ஹோல்டிங்ஸ் ஆனது, நிலைத்தன்மை முயற்சிகளில் முதலீடு செய்யும் போது. திறன் அதிகரிப்பு, தயாரிப்பு தரத்தை மேம்படுத்துதல் மற்றும் புதிய தயாரிப்புகளை



அறிமுகப்படுத்துதல் ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க வித்தியாசமான அணுகுமுறையை மேற்கொண்டதை அங்கீகரிப்பதாக இவ் விருதுகள் அமைந்துள்ளன.

இந்த அணுகுமுறை குறித்து கருத்து தெரிவித்த சியெட் களனியின் முகாமைத்துவப் பணிப்பாளர் ரவி தட்லானி, "இது தொடர்பாக இரண்டு காரணிகள் கருத்தில் எடுக்கப்பட்டன. அந்நியச் செலாவணியைப் பாதுகாப்பதற்கான அரசாங்கத்தின் முயற்சிகளின் ஒரு பகுதியாக சில வகை டயர்களை இறக்குமதி செய்வதில் உள்ள கட்டுப்பாடுகளால் உருவாக்கப்பட்ட வாய்ப்புகள் மற்றும் டயர் பற்றாக்குறையால் பொருளாதார நடவடிக்கைகள் பொதுப் போக்குவரத்து பாதிக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்து, சந்தையின் தேவைகளைப் பூர்த்தி செய்வது அதன் கடமை என்ற நிறுவனத்தின் நம்பிக்கை ஆகியவையே அவை." என அவர் கூறினார்.

தேசிய வர்த்தக சிறப்பு விருதுகளுக்காக மதிப்பிடப்பட்ட காலத்தில் சியெட்டுக்கான சிறப்பம்சங்களில், பயணிகள் கார் ரேடியல்களின் (PCRs) உற்பத்தியை விரைவாக விரிவுபடுத்துவதற்கான தொடர்ச்சியான முதலீடுகளும் அடங்குவதுடன் இதனால் சியெட் களனி உற்பத்தியை 172,000 ரேடியல் டயர்களால் அதிகரித்ததன் மூலம் சர்வதேச வாகனப் பணிப் படையிடமிருந்து (IATF) IATF 16949:2016 சான்றிதழைப் பெற்ற இலங்கையில் உள்நாட்டில் தயாரிக்கப்படும் ஒரே டயர் வர்த்தக நாமம் என்ற சிறப்பைப் பெற்றது.

உள்நாட்டில் பொருத்தப்பட்ட வாகனங்களுக்கு டயர்களை வழங்க, மஹிந்திரா (Mahindra), லங்கா அசோக் லேலண்ட் மற்றும் யுனைடெட் மோட்டார்ஸ் ஆகியவற்றுடன் அசல் உபகரண உற்பத்தியாளர் (OEM) உடன்படிக்கைகளை மேற்கொண்டதன் மூலமும் சூரிய சக்தி ஆலையில் ரூ 476 மில்லியனை முதலீடு செய்ததன் மூலமும் புதிய [illegible]

## SME துறைக்கு நான்காவது ஆண்டாக

### அதிக கடன் வழங்கிய வங்கி கொமர்ஷல் வங்கி

கொமர்ஷல் வங்கியானது இலங்கையின் சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு (SME) கடந்த 2023 ஆம் ஆண்டில் மிகப்பெரிய கடன் வழங்குநராக திகழ்ந்தது. இதற்கிணங்க மொத்தம் 17 அரச மற்றும் தனியார் துறை கடன் வழங்கும் நிறுவனங்களால் வழங்கப்பட்ட கடன் பெறுமதியில் கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பங்கை வங்கி கொண்டிருந்ததாக நிதி அமைச்சு உறுதி செய்துள்ளது.

2023 ஆம் ஆண்டிற்கான நிதி அமைச்சின் வருடாந்த அறிக்கைக்கிணங்க, வழங்கியுள்ள 704.142 பில்லியன் மொத்தக் கடனில் 231.655 பில்லியனை கொமர்ஷல் வங்கியானது சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு (SME) கடனாக வழங்கியுள்ளது. இது வங்கி வழங்கியுள்ள மொத்தக் கடனில் 33% ஆகும்.

நாட்டின் சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு கொமர்ஷல் வங்கியானது தொடர்ச்சியாக நான்காவது ஆண்டாக மிகப்பெரிய கடன் வழங்குநராக திகழும் நிலையில். நிதியமைச்சின் கூற்றுக்கிணங்க நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) 52%, வேலைவாய்ப்பில் 45% மற்றும் ஏற்றுமதியில் 20% என்ற ரீதியில் பங்களிப்பினை வழங்கி வருகிறது.

SME துறைக்கான வங்கியின் அர்ப்பணிப்பு குறித்து கருத்துத் தெரிவித்த கொமர்ஷல் வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளர்/ பிரதம நிறைவேற்று அதிகாரி சனத் மனதுங்க, "சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் நமது பொருளாதாரத்தின் முதுகெலும்பாக திகழும் நிலையில் தற்போதைய நிலையற்ற பொருளாதார நிலைமையில் இத்துறைக்கு கணிசமான ஆதரவு தேவைப்படுகிறது.

1970களின் முற்பகுதியில் இருந்து, கொமர்ஷல் வங்கி இந்தத் துறையின் முழுமையான வளர்ச்சியில் மூலோபாய ரீதியாக கவனம் செலுத்தி வருகிறது.

எங்களது முயற்சிகள் தொடர்ந்து நான்காவது ஆண்டாக SME துறைக்கு மிகப்பெரிய கடன் வழங்குபவராக எங்களை நிலை நிறுத்தியுள்ளது.

SME பிரிவுக்கான எங்கள் கடன் 2020 இல் 163.9 பில்லியனில் இருந்து 2023 இல் 231.6 பில்லியனாக வளர்ச்சியடைந்துள்ளது. இது இந்தத் துறையில் வங்கியின் உறுதியான உறுதிப்பாட்டை விளக்குவதாக உள்ளது.

கொமர்ஷல் வங்கியானது SME துறையின் நிதித் தேவைகளை மதிப்பிட்டு வருவதுடன் ஏற்றுமதி, உள்நாட்டு உற்பத்தி, பெண்கள் தலைமையிலான வர்த்தகங்கள் மற்றும் இறக்குமதி மாற்றுத் தொழில்கள் போன்ற இலக்குப் பிரிவுகளில் வங்கியால் பாதுகாக்கப்பட்ட சலுகைக் கடன் வரிகள் மூலம் நிதி உதவியானது நீடிக்கப்பட்டு வருகிறது.

பல்வேறு காரணங்களால் குறைவான செயற்றிறன் கொண்ட வர்த்தக செயற்பாடுகளுக்கு புத்துயிர் அளிப்பதற்காக, முன்கூட்டியே எச்சரிக்கை சமிக்ஞைகளை வெளிப்படுத்தும் வர்த்தகர்களுக்கு முன்கூட்டியே ஆதரவளிக்க, 2020 ஆம் ஆண்டில் வர்த்தக மறுமலர்ச்சி மற்றும் மறுவாழ்வு பிரிவை வங்கி அமைத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைகளுக்கு முன்பாக அதிபர், ஆசிரியர்கள் போராட்டம்

(கொழும்பு)

கடந்த வாரம் அதிபர், ஆசிரியர்கள் மீது தொடுத்த மிலேச்சத்தனமான தாக்குதலை கண்டித்து நாடு தழுவிய ரீதியில் பாடசாலைகளுக்கு முன்பாக அதிபர், ஆசிரியர்கள் கறுப்புப் பட்டியணிந்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இப்போராட்டம் நேற்று பாடசாலை நிறைவடைந்த வேளையில் 2 மணிக்கு பின்னர் இலங்கையில் உள்ள சகல பாடசாலைகள் முன்பாகவும் இடம்பெற்றது. இந்த போராட்டத்தை இணைந்த அதிபர் ஆசிரியர் தொழிற்சங்க கூட்டமைப்பு ஏற்பாடு செய்திருந்தது. இதில் சாதாரண வேண்டுதலுக்கு தீர்வு கொடு, ரணில் விக்கிரமசிங்கவின் ஒடுக்கு முறை அறிக்கைக்கு எதிராக போராடுவோம் என பல்வேறு சுலோகங்களை ஏந்தி அதிபர், ஆசிரியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்ததை அவதானிக்க முடிந்தது.(நி-6)

# அதிகாரிகளை பூட்டி வைத்த கடை உரிமையாளர் மறியலில்

(யாழ்ப்பாணம்)

யாழில் மருந்தகமொன்றை சோதனையிடச் சென்ற அரச உத்தியோகத்தர்கள் இருவரை மருந்தகத்திற்குள் பூட்டி வைத்த கடை உரிமையாளரை நாளை மறுதினம் வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்.நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

யாழ்.மாவட்ட விசேட குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாருக்கு அரச அதிகாரிகளால் முறைப்பாடு செய்யப்பட்டது. இதனையடுத்து சம்பவ இடத்திற்கு வந்த யாழ். மாவட்ட விசேட குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார், மருந்தகத்தினுள் வைத்து பூட்டப்பட்டிருந்த அரச உத்தியோகத்தர்களை மீட்டதுடன், அனுமதியின்றி மருந்து விற்பனையில் ஈடுபட்டமை மற்றும் அரச உத்தியோகத்தர்களின் கடமைக்கு இடையூறு விளைவித்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டின் கீழ் கடை உரிமையாளரை கைது செய்தனர்.

சந்தேகநபரை யாழ். பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்த பின்னர் நேற்று யாழ். நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்திய வேளை மருந்தக உரிமையாளரை நாளை மறுதினம் வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு மன்று உத்தரவிட்டுள்ளது. (நி-6-33)

# மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ பூதேஸ்வரர் சிவன் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் இன்று புதன் கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் உற்சவங்கள் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 11 ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும் 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தீர்த்த திருவிழாவும் இடம்பெறவுள்ளது என ஆலய நிர்வாக சபை அறிவித்துள்ளது. (நி-6)

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் கிழக்கு ஆசி மட அரசடி விநாயகர் ஆலய மஹோற்சவம் இன்று புதன்கிழமை காலை 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 11 தினங்கள் உற்சவங்கள் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 11 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு தீர்த்த திருவிழாவும் அன்று மாலை 6 மணிக்கு கொடியிறக்க வைபவமும் இடம் பெறும். (நி-6)

## தேர்தலுக்கு குட்பாய் சொன்ன மைத்திரி

(கொழும்பு)

எதிர்காலத்தில் ஜனாதிபதித் தேர்தலிலோ, பொதுத் தேர்தலிலோ தான் போட்டியிடப் போவதில்லை என முன்னாள் ஜனாதிபதி, பாராளுமன்ற உறுப்பினர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் தேர்தலில் பொலன்னறுவை மாவட்டத்தில் தனது மகன் தம்ம சிறிசேன போட்டியிடுவார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.எவ்வாறாயினும், தாம் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் அரசியலை தொடர்ந்து முன்னெடுப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-6)

# ஊழியர் சேமலாப நிதிய சட்டத்தில் திருத்தம்

## அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

ஊழியர் சேமலாப நிதியச் சட்டம் திருத்தம் செய்யப்படவுள்ளது.

ஓய்வூதியம் பெறாத தனியார் மற்றும் பகுதி அரச ஊழியர்களின் சமூகப் பாதுகாப்பிற்காக ஊழியர் சேமலாப நிதியம் நிறுவப்பட்டுள்ளது.

இதன்படி ஊழியர் சேமலாப நிதியத்துக்கு உள்வாங்கப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரித்து அவர்களுக்குத் தரமான மற்றும் வினைத்திறனான சேவையை வழங்கும் நோக்கில் குறித்த சட்டம் திருத்தப்படவுள்ளது.

இதற்கான சட்டமூலத்தை தயாரிப்பதற்காக சட்டவரைஞர் திணைக்களத்துக்கு அறிவுறுத்தல் வழங்குவதற்காகத் தொழில் அமைச்சர் மனுஷ நாணயக்கார முன்வைத்த யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. (நி-6)

# கஜேந்திரகுமார் எம்.பிக்கு விடுமுறை வழங்க அனுமதி

(கொழும்பு)

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ். மாவட்ட எம்.பி.யுமான கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திற்கு பாராளுமன்றத்தினால் 3 மாதங்களுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றம் நேற்று செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது.

பிரதான நடவடிக்கைகள் அனைத்தும் முடிந்த நிலையில், எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்லவினால் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திற்கான விடுமுறை முன்மொழியப்பட்டது .

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ். மாவட்ட எம்.பி.யுமான கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திற்கு நேற்றிலிருந்து 3 மாத காலங்களுக்கு விடுமுறையளிக்குமாறு வேண்டுகின்றேன் என லக்ஷ்மன் கிரியெல்லவினால் விடுமுறை முன்மொழியப்பட்டது. இதனை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் எம்.பி.



யான செல்வராசா கஜேந்திரன் வழிமொழிந்தார்.

இதனையடுத்து தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும்யாழ்.மாவட்ட எம்.பி.யுமான கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திற்கு பாராளுமன்றத்தினால் 3 மாதங்களுக்கு விடுமுறை வழங்க சபை இணக்கம் வெளியிட்டது. (நி-6)



மன்னார் மாந்தை மேற்கு பிரிவின் இலுப்பைக்கடவை பகுதியில் ரி.ரி.ஈ.சிகோ பவுண்டேசனின் கீழ் இயங்கும் சாரதா கல்விக் கூடத்திற்கான அடிக்கல் நாட்டலும் தற்காலிக கல்விச் செயற்பாட்டுக்கான கட்டடமும் அண்மையில் மன்னார் மாவட்ட அரச அதிபர் க.கனேஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது.


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 27 1/2<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: BSC. civil Engineer<br>எதிர்பார்ப்பு: Engineer, உயர் பதவி<br>தொ.இ: B/14614 | பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>12 இல் செவ்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: A/L (விவாகரத்தானவர்)<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தான வெளிநாட்டு வரன்<br>தொ.இ: G/14615 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 17 1/2<br>5 இல் சூரி செவ்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: QS<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி, அரச உத்தியோகம்<br>தொ.இ: B/14616 | பிறப்பு: 1997 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: 59 1/4<br>1 இல் செவ்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:NVQ, Make up ,Cake<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு, PR, படித்த தொழில் புரியும் மணமகன்<br>தொ.இ: G/14621 |
| பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>2 இல் சூரி செவ்<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்: A/L,Bank officer<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/14617 | பிறப்பு: 1997 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>8 இல் செவ்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:முகாமைத்துவ பட்டதாரி, உதவிக்கணக்காளர்.<br>எதிர்பார்ப்பு: கணக்காளர், பொறியிலாளர், சைவபோசனம் விரும்பத்தக்கது.<br>தொ.இ: G/14623 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## இந்தியர்கள் கல்வியை விட திருமணத்திற்கே அதிகம் செலவிடுகின்றனர்

### அமெரிக்காவின் ஆய்வில் தகவல்



(வோஷிங்டன்)

இந்தியர்கள் அதிகபட்சமாக உணவு மற்றும் கல்வியை விட திருமணத்திற்காக அதிக அளவில் செலவு செய்வதாக அமெரிக்காவைச் சேர்ந்த நிறுவனம் நடத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது.

இந்தியாவில் உணவு மற்றும் மளிகை பொருட்களுக்கு அடுத்தபடியாக, ஆண்டிற்கு சுமார் ரூ.10 லட்சம் கோடி செலவிடப்படுவது திருமணத்திற்கு தான் என்று அமெரிக்க நிறுவனம் ஒன்று நடத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது.

அமெரிக்காவைச் சேர்ந்த ஜெஃப்ரிஸ் (Jefferies) என்பது பன்னாட்டு முதலீட்டு மற்றும் நிதி நிறுவனம். இந்த நிறுவனம் நியூயோர்க்கைத் தலைமையிடமாகக் கொண்டுள்ளது.

குறிப்பாக இந்த நிறுவனம் 60 ஆண்டுகளுக்கும் மேலாகச் செயற்பட்டு வருகிறது.

இந்த நிறுவனம் சமீபத்தில் இந்தியர்களின் திருமணம் செய்யும் செலவுகளை பற்றி ஆய்வு ஒன்றை நடத்தியது.

அந்த ஆய்வின்படி, இந்தியத் திருமணத்திற்காக ரூ.10.7 லட்சம் கோடி செலவு செய்வதாக கூறப்பட்டுள்ளது. இது அமெரிக்காவைக் காட்டிலும் இரண்டு மடங்கு அதிகமாகும்.

இந்தியர்களின் சராசரி ஆண்டு வருமானம் ரூ.4 லட்சமாக உள்ள நிலையில், வருமானத்தைக் காட்டிலும் மூன்று மடங்கு அதிகமாக திருமணத்திற்குச் செலவு செய்வதாக ஆய்வில் கூறப்பட்டுள்ளது. (நி-6)

## உக்ரைனில் சதிப்புரட்சி திட்டம் முறியடிப்பு

### கலகத்தை ஏற்படுத்தி பாராளுமன்றத்தை கைப்பற்ற திட்டம்

(கீவ்)

உக்ரைன் அரசாங்கத்தை பதவி கவிழ்ப்பதற்கான சதிப்புரட்சி முயற்சியொன்றை முறியடித்துள்ளதாக அந்த நாட்டின் பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஜூன் 30 ஆம் திகதி உக்ரைன் தலைநகரில் கலவரமொன்றை ஏற்படுத்தி அதனை பயன்படுத்தி உக்ரைன் பாராளுமன்றத்தை கைப்பற்றுவதற்கும் இராணுவத்தையும் அரசியல் தலைமைத்துவத்தையும் அதிகாரத்திலிருந்து அகற்றுவதற்கும் சதிபுரட்சி முயற்சி குழுவினர் திட்டமிட்டனர் என உக்ரைனின் பாதுகாப்பு சேவை தெரிவித்துள்ளது. எனினும் குற்றம் சாட்டப்பட்டவர்களிற்கு ரஷ்யாவுடன் தொடர்புள்ளதா என்ற விபரங்கள் வெளியாகவில்லை.

ஐந்து சந்தேகநபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என இஸ்ரேலிய பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். குற்றமுயற்சியை உறுதிப்படுத்தும் பல பொருட்கள் ஆயுதங்கள் போன்றவற்றை கைப்பற்றியுள்ளதாக அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். சதிபுரட்சி குழுவின் தலைவர் 2000பேர் அமரக்கூடிய மண்டபம் ஒன்றை வாடகைக்கு எடுத்து பாராளுமன்றத்தை கைப்பற்றுவதற்காக தனியார் பாதுகாப்பு நிறுவனங்களை சேர்ந்த பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் இராணுவத்தினரை சேர்த்துக் கொண்டார்கள் என உக்ரைன் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



குற்றவாளிகள் என உறுதி செய்யப்பட்டால் அவர்களிற்கு 10 வருட சிறைத்தண்டனை விதிக்கப்படலாம். (நி-6)

## போட்டி முடிந்ததும் அடக்கம் பண்ணிக்கலாம்

### இறந்த உடலுடன் மட்ச் பார்த்த குடும்பம்



(வோஷிங்டன்)

சமூக வலைதள புகழுக்காக சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை பலதரப்பட்டவர்களும் வித்தியாசமான ரீல்ஸ் வீடியோக்களை வெளியிட்டு வருகின்றனர். அவற்றில் சில வீடியோக்கள் விமர்சனங்களை சந்திக்கும். பல வீடியோக்கள் வைரலாகும்.

அந்த வகையில் தென் அமெரிக்காவில் உள்ள ஒரு குடும்பம் கால்பந்து போட்டியைப் பார்ப்பதற்காக இறுதி சடங்கை நிறுத்தி வைத்த சம்பவம் அரங்கேறியது. இதுதொடர்பாக சமூக வலைத்தளமான எக்ஸ் தளத்தில் தற்போது வீடியோ ஒன்று வைரலாகி வருகிறது.

டாம் வாலண்டினோ என்ற பயனர் பதிவிட்ட இந்த வீடியோ 18 விநாடிகளே ஓடுகிறது. வீடியோவில், இறந்த உறவினரின் சவப்பெட்டியின் அருகில் அமர்ந்து ப்ரொஜெக்டர் வைத்து பெரிய திரையில் சிலி மற்றும் பெரு அணிகள் இடையே நடைபெற்ற கோபா அமெரிக்கா கால்பந்து விளையாட்டு போட்டியை குடும்பத்தினர் பார்ப்பதை காண முடிகிறது. (நி-6)

## பாதசாரிகள் மீது மோதிய கார் 9 பேர் ஸ்தலத்தில் உயிரிழப்பு!

### தென்கொரியாவில் சோகம்

(சியோல்)

தென் கொரியாவின் தலைநகர் சியோலில் பாதசாரிகள் மீது கார் மோதிய விபத்தில் 9 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்த விபத்தில் மேலும் நான்கு பேர் காயமடைந்துள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

குறித்த கார் தவறான திசையில் செலுத்தப்பட்டு பாதசாரிகள் மீது மோதுவதற்கு முன்னர் மேலும் 2 வாகனங்களுடன் மோதியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.



இந்த விபத்தில் 6 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்றும் விபத்தை ஏற்படுத்திய சாரதி கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (நி-6)

## லெபனானில் போர்ப்ப...

### சவுதி பிரஜைகளை வெளி...

### அந்நாட்டு அரசு உத்...



(ஜெர்த்தா)

லெபனானில் வசிக்கும் தனது நாட்டின் குடிமக்கள் அனைவரும் உடனடியாக வெளியேறும்படி சவுதி அரேபியா அறிவுறுத்தி உள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இஸ்ரேல்-காசா போர் கடந்த 8 மாதங்களுக்கும் மேலாக தொடர்ந்து நடைபெற்று வரும் நிலையில் காசாவுக்கு ஆதரவாக லெபனானில் உள்ள ஹிஸ்புல்லா கிளர்ச்சியாளர்கள் செயற்படுகின்றனர். இவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாதப் பட்டியலில் இருந்து ஹிஸ்புல்லா அமைப்பு நீக்கம்

## அரபு லீக் அறிவிப்பு

(சிரியா)

**பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலிலிருந்து லெ-பனானின் ஹிஸ்புல்லா அமைப்பின் பெயரை அரபு நாடுகளின் கூட்டமைப்பான அரபு லீக் நீக்கியுள்ளது.**

ஹிஸ்புல்லாக்களை பயங்கரவாதிகள் என்று அழைப்பதால் அவர்களுடன் தகவல் தொடர்பை ஏற்படுத்திக்கொள்ள முடியாத நிலை உள்ளதாக, அரபு நாடுகளின் கூட்டமைப்பின் துணைப் பொதுச் செயலாளர் ஹோஸம் ஸாகி தெரி வித்துள்ளார்.

இந்த நிலையைப் போக்குவதற்காக, பயங்கரவாத அமைப்புகள் பட்டியலிலிருந்து ஹிஸ்புல்லா ஆயுதக் குழுவினரை நீக்க உறுப்பு நாடுகள் ஒப்புக்கொண்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஹிஸ்புல்லா படையை பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலில் சேர்த்திருந்ததாகவும், இது தங்கள் தீர்மானங்களிலும் எதிரொலித்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

எகிப்து, சவூதி அரேபியா, லெபனான், சிரியா உள்ளிட்ட 22 நாடுகளை உறுப்பினர்களாகக் கொண்ட அரபு லீக், ஈரானால் உருவாக்கப்பட்ட ஹிஸ்புல்லா படையினரை பயங்கரவாதிகளாக கடந்த 2016 ஆம் ஆண்டு அறிவித்தது. (நி-6)



## உலகின் மிக நீளமான சைக்கிள்

### கின்னஸ் சாதனை படைத்த டச்சு பொறியாளர்கள்



உலகிலேயே நீளமான சைக்கிளை 8 டச்சு பொறியாளர்கள் தயாரித்து சாதனை படைத்துள்ளனர்.

180 அடி நீளமுள்ள இந்த சைக்கிள் கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம்பெற்றுள்ளது.

இதற்கு முன்பு அவுஸ்திரேலியாவை சேர்ந்த பெர்னி ரியான் என்பவர் தயாரித்த 155 அடி நீளமுள்ள சைக்கிள் தான் உலகிலேயே நீளமான சைக்கிள் என்ற சாதனையை படைத்திருந்தது.

டச்சு பொறியாளர்கள் குழுவில் இருந்த இவான் ஷால்க் என்ற 39 வயது பொறியாளர் தனது சிறு வயதில் இருந்தே இந்த நீளமான சைக்கிளை உருவாக்க வேண்டும் என்று கனவு கொண்டிருந்தார். அந்த கனவை இப்போது அவர் நனவாக்கியுள்ளார்.

உலகின் நீளமான சைக்கிள் என்ற சாதனை கடந்த 60 வருடங்களில் பலமுறை முறியடிக்கப்பட்டுள்ளது.

முதல்முதலாக 1965 ஆம் ஆண்டு ஜேர்மனியில் 26 அடி நீளத்தில் உலகின் முதல் நீளமான சைக்கிள் உருவாக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (நி-6)

...பதற்றம்

...ளியேற்றுமாறு

...டத்தரவு

...கள் இஸ்ரேல் எல்லைப் பகுதிகளில் அடிக்கடி தாக்குதலில் ஈடுபடுகின்றனர். மேலும் இஸ்ரேலின் வடக்குப் பகுதிகளை ஆக்கிரமிக்க போவதாகவும் ஹிஸ்புல்லா கிளர்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே லெபனானில் உள்ள ஹிஸ்புல்லா கிளர்ச்சியாளர்களையும் முழுமையாக ஒழிக்க இஸ்ரேல் உறுதியளித்துள்ளது.

இதனால் அங்கு போர்ப்பதற்றம் நிலவுவதையடுத்து சவுதி அரேபியா இந்த அறிவித்தலை விடுத்துள்ளது. (நி-6)

# இரண்டு கிராமங்களைக் கைப்பற்றியதாக ரஷ்யா அறிவிப்பு-உக்ரைன் மறுப்பு



(மொஸ்கோ)

உக்ரைனின் கிழக்கு பகுதியிலுள்ள இரண்டு கிராமங்களை ரஷ்ய இராணுவம் கைப்பற்றியுள்ளதாக ரஷ்ய பாதுகாப்பு அமைச்சகம் அறிவித்துள்ளது.

தலைநகர் கார்கிவ் பகுதியில் உள்ள ஸ்டெபோவா நோவோசெலிவ்கா மற்றும் டொனெட்ஸ்க் பகுதியிலுள்ள நோவோபோக்ரோவ்ஸ்கே ஆகிய இரண்டு கிராமங்களையே தங்களின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளதாக ரஷ்யா அறிவித்துள்ளது.

எனினும், இதனை திட்டவட்டமாக மறுக்கும் உக்ரைன் இராணுவம், மேற்கூறப்பட்ட பகுதிகளில் ரஷ்ய இராணுவத்தின் தாக்குதல்களுக்கு தகுந்த பதிலடி கொடுக்கப்பட்டதாக தெரிவித்துள்ளது.

கடந்த மே மாதம் முதல் உக்ரைன் தலைநகர் கார்கிவ் மீது, ரஷ்யா தனது இராணுவ நடவடிக்கைகளை வலுப்படுத்தியுள்ளது.

ரஷ்யா - உக்ரைன் இடையேயான போர் கடந்த 3 வருடங்களாக நடந்து வரும் நிலையில், இந்த போரில் உக்ரைன் பகுதியிலேயே அதிகளவான உயிரிழப்புக்களும், சேதங்களும் ஏற்பட்டுள்ளதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

மேற்கு நாடுகளின் உதவியுடன், உக்ரைன் இந்த போரில் ஈடுபட்டுள்ளது.

. ரஷ்யாவுக்கு வடகொரியா, சீனா உள்ளிட்ட நாடுகள் ஆதரவளித்து வருகின்றன.

இந்நிலையில், உக்ரைனை கைப்பற்றுவது தங்களின் நோக்கம் இல்லை என தெரிவிக்கும் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின்,

மேற்குலக நாடுகளால், உக்ரைன் வழியாக தங்களுக்கு எந்த ஆபத்தும் வந்துவிடக்கூடாது என்பதில் உறுதியாக உள்ளதாக தெரிவித்துள்ளார். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக நாடுகளிடையே முரண்பாடுகளும் உணவுப்பற்றாக்குறையும்



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை,

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

ஊலகளாவிய ரீதியில் தற்போது போர்மேகங்கள் மீண்டும் களைகட்டத் தொடங்கியிருக்கின்றன. மேற்கத்தேய நாடுகளில் விரிவாக்கம் பெறும் போர்களின் தாக்கம் எமது பொருளாதாரத்தையும் வாழ்வாதாரத்தையும் உலுக்கியெடுத்துவிடும். ஏற்கெனவே பொருளாதார வீழ்ச்சியை கண்ட எமது நாட்டின் வளர்ச்சி மந்த கதியில் முன்னேறு கின்ற நிலையில் இன்னமும் கடன்களை அடைத்துவிட திண்டாடும் நிலையில் ஐரோப்பிய நாடுகளில் தீவிரமடையும் போரின் தாக்கம் எம்மை நிச்சயம் பாதிக்கும்.

அதேபோல நாடுகளின் பலப்பரீட்சையின் விளைவாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் இனியும் நடைபெறப் போகும் போரின் தீவிரத் தன்மை பலநாடுகளில் உணவுக்கு பஞ்சம் ஏற்பட வாய்ப்புள்ளதாக அறிக்கைகள் வெளிவருகின்றன. ஆபிரிக்க நாடான சூடானில் தற்போது 25.6 மில்லியன் மக்கள் பஞ்சத்தினால் துவண்டு கொண்டிருக்கின்றார்கள். பாலஸ்தீனம் இஸ்ரேலின் யுத்த பூமியான காசா பகுதியிலும் இந்தநிலை உருவாகியிருப்பதாக தகவல்கள் வருகின்றன. ஒவ்வொரு வேளையும் பசியும் பட்டினியுடனேயே மழலைகளின், கர்ப்பிணிகளின், வயது முதிர்ந்தவர்களின் பொழுதுகள் கழிகின்றன. உயிருக்கு உத்தரவாதமில்லாதது ஒருபுறமிருக்க உணவுக்கும் உத்தரவாதமில்லாத ஒவ்வொரு கணங்களும் இந்த வெந்த பூமியையும் மீளநினைத்துக் கொள்கின்றன.

போர் நடந்து கொண்டிருக்கும் நாடுகளில் இடம்பெயர்ந்தோருடைய தேவைகள் பூர்த்தி செய்யப்படாமையினால் மக்கள் அல்லல்படுகின்றனர். உணவுப் பற்றாக்குறை மட்டுமல்ல ஊட்டச்சத்து பற்றாக்குறையும் இதிலடங்கும். வளர்ச்சியடைந்த நாடுகளில் உணவுற்பத்தியை பன் மடங்கு அதிகரிப்பதற்காக பல்வேறு தொழினுட்பங்கள் உருவாக்கப்பட்டு திருந்திய கலப்பினங்கள் உருவாக்கப்பட்டு பயிருற்பத்தி பன்மடங்காக அதிகரித்தும் அது ஒருவேளை உணவுக் காக அல்லல்படும் மக்களுக்கு சென்றடையவில்லையே. ஒவ்வொரு வேளை உணவுக்கும் திண்டாடும் நிலையில் எத்தனை எத்தனை குடும்பங்கள் தவித்துக் கொண்டிருக்கும் போது உலகம் செவ்வாயையும் சூரியனையும் நோக்கி பயணிக்க முனைந்து கொண்டிருப்பது விஞ்ஞானத்தின் திருப்புமுனையல்ல.

போருக்கான முனைப்பு. புதியவகை ஆயுதங்களின் ஆர்ப்பரிப்புடன் இன்னும் முன்நகர்ந்து கொண்டிருக்கின்றது. உலகம் அமைதியை தேடியலையும் காலத்தை தாண்டி உருக்குலைக்கும் நகர்வுகளை முன்னெடுத்துள்ளமை அவர்களது சமகால செயற்பாடுகளிலிருந்து காணமுடிகின்றது. உணவுற்பத்திக்கான அனைத்து முயற்சிகளையும் விரிவுபடுத்துதல் அவசியம். பிறநாடுகளில் தங்கியிருக்கும் தன்மையிலிருந்து விலகி தமது உற்பத்தியில் கவனஞ்செலுத்துதல் மிகவும் பொறுப்புடைய செயற்பாடாகும். பொருளாதார வீழ்ச்சியில் இருந்து மீண்டு வரும் வரை சுய உற்பத்தியில் தங்கியிருத்தல் அவசியமான தாகும்.

எமது உற்பத்தியை நாமே மீட்டெடுக்க வேண்டிய நிலைக்குள் காலமும் கால நிலையும் எம்மை வலிந்திழுத்து வந்திருக்கின்றன. ஆனால் எமது தேசத்தில் இதற்கான செயற்றிட்டங்கள் இன்னும் உத்வேகமாக நடைமுறைப்படுத்தல் அவசியம். மக்களின் உணவுத் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் குறிப்பாக வாழ்வாதாரத்தின் விழிம்பிலிருக்கும் மக்களை இனங்கண்டு அவர்களுக்கான திட்டங்களை விரைந்து செயற்படுத்தலாம். பல்பயன்தரு தாவரங் களுக்கு முன்னுரிமை கொடுத்து அவற்றின் பயிருற்பத்தியை ஊக்குவிக்கலாம். பல் வகைத் தன்மையை உறுதி செய்யும் பன்முக செயன் முறை யுடைய





தோட்டங்களை உருவாக்கலாம். குறிப்பாக இளையவர்களுக்கு தேவையான தொழில்னுட்ப அறிவினையும் அதற்கான திறனையும் வழங்கி சிறப்பான பயிர்ச்செய்கையை செய்வதனை அங்கீகரித்து விவசாயிக்கான உயரிய அந்தஸ்தும் வழங்கப்படல் வேண்டும்.

ஊட்டச்சத்தும் சமமாக உணவுற்பத்தியுடன் கவனத் திற்கொள்ளப்படல் வேண்டும். சமமான உணவு நிறையுணவு என்னும் பதங்களுக்கு அர்த்தமுள்ளதாக உணவினை வேண்டிய ஊட்டச்சத்துக்கள் அடங்கியதாக உற்பத்திசெய்தல் அவசியமானதாகும். எமது பிரதேசத்தில் காணப்படும் பல்வகை பயிர்களிலிருந்து எமக்கு தேவையான அனைத்து விற்றமின்கள் ,கனியுப்புக்கள் என்பனவற்றை பெற்றுக் கொள்ளல் சிறந்தது. எமது சனத் தொகைக் ஶ்ரீகேற்ப பாரம்பரிய உணவுகளி லேயே எமது தேவைகள் அடங்கி விடுமாதலால் அதனையும் கருத்திலெடுத்து உற்பத்தியை, சந்தைப்ப படுத்தலை, களஞ்சியப்படுத் தலை விரிவாக்குவதற்கான வழி வகை களை உருவாக்க லாம்.

எமதுதேசம் அனைத்தையும் மறந்து தற்போது தேர்தல் களத்திற்குள் குதித்திருக்கின்றது. களநிலவரங்கள் எப்படி மாறினும் பொருளாதார முன்னேற்றமென்பது இத்தேர்தல் வலைக்குள் சிக்குண்டிருக்கின்றது. சிறந்த தலைமைத்துவத்தை தேடி மக்கள் நகரத் தொடங்கிவிட்டார்கள். மக்களின் இயல்பு வாழ்க்கை இவ்வாறான இடர்காலங்களில் இன்னும் மேம்பட்டிருத்தல் அவசியமாகின்றது. அதற் கான செயலணியை கட்டியமைத்தல் அவசியமானதாகும்.

எமது பிரதேசத்தில் காலநிலை மாற்றத்தை துல்லியமாக கண்காணித்து அதற்கான பொறிமுறையுடனான நிறுவனத்தை ஸ்தாபிப்பது மூலமாக காலநிலையை எதிர்வுகூறுதல், முன்கூட்டிய அறிவுப்புக்கள் என்பனவற்றை அனுபவத்தினூடாக கணனித் தொழில்நுட்பத்துடன் விரைந்து செயற்படுத்த வழி வகைகள் செய்தல் தகும்.

காலந்தப்பி பெய்யும் மழையும் அதனால் திட்டமிடப்பட்ட பயிர்ச் செய்கை அறுவடை மற்றும் களஞ்சியப்படுத்தல் என்பனவற்றை வினைத்திறனாக சேதமின்றி செய்யமுடியாமல் போய் விடுகின்றது. தற்போதிருக்கும் வசதி வாழ்க்கையை மையப்படுத்தி அவர்களின் அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்பட்டு வாழ்வாதாரத்தின் அடித்தளத்தில் வாழும் மக்களை உயர்வு பெறவைத்தல் வேண்டும். வெளிநாட்டு நிறு வனங்களின் பங்களிப்பு தொடர்ந்து எமது பிரதேசத்திற்கு கிடைக்காது. அதனால் எமக்கான உற்பத்தியையும் அதற்குரிய தொழில்நுட்ப அறிவையும் பெற்றுக் கொண்டால் எமது உற்பத்தியை மேலும் முன்னேற்றுவதற்கு வாய்ப்புக்களுண்டு. வருங்காலம் வளமானதாக இருந்தாலும் உழைப்பின்றி உயர்வில்லை.

## இன்று ஒரு தகவல் 171



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

# இன்பப் புதையல்

ஒரு வெளி தேசத்திலே இருந்து ஒருவர் நமது நாட்டிற்கு வந்தார். இங்கே ஒருவர் அவரை அன்பாகக் கூப்பிட்டு உபசரித்தார். ஒரு ஆரஞ்சுப்பழத்தை அவரிடம் கொடுத்து சாப்பிடச் சொன்னார். அவர் அதை வாங்கினார். அப்படியும் இப்படியும் புரட்டிப் பார்த்தார். அவர் தேசத்திலே அது இல்லைப் போல இருக்கிறது. என்ன செய்வது என்று தெரியவில்லை. கடித்துப் பார்த்தார். கசப்பாக இருந்தது. தூக்கி எறிந்து விட்டார். ஏன் அதை தூக்கி எறிந்தீர்கள் என்று கேட்டார் இவர். கசக்குது அதை எப்படி சாப்பிடுவது என்றார் அவர். அதை அப்படி சாப்பிடக் கூடாது. மேலே உள்ள தோலை எடுத்து எறிந்து விட வேண்டும். இனிப்பான பகுதி உள்ளே இருக்கிறது. என்று விவரம் சொன்னார் இவர்.

இப்படி சொன்னவர் ஒரு யோகி. வாழ்வின் வெளிப்பக்கத்திலேயே இருந்து கொண்டிருந்தால் கசப்பான பிரச்சினைகளையே சந்திக்க வேண்டியிருக்கும். உள் பக்கத்துக்கு போக வேண்டும். அப்போது தான் அங்கே இருக்கின்ற இனிப்பை உணர முடியும் என்றார் அந்த யோகி. நாங்கள் எல்லாம் இரண்டு வகையான வாழ்க்கை வாழ்கின்றோமாம்.

மேலோட்டமான வெளிப்படையாக உள்ள வாழ்வு என்பது ஒன்று. உள்ளார்ந்த வாழ்வு என்பது இன்னொன்று. வாழ்வின் வெளிப்புறம் பிரச்சினைகளும் சவால் களும் நிறைந்தது. உள்புறம் அமைதியாக உள்ளது. இந்த உள்பக்கத்திலே தான் மகிழ்ச்சியான வாழ்வுக்கு தேவை யான புதையல் இருக்கிறதாம். யார் கண்டார் அந்தப் புதையலை? ஆழ்நிலை தியானம் எல்லாம் செய்வார்களே அது எதற்காக? இந்தப் புதையலைக் கண்டுபிடிப்பதற்காகத் தான். நாம் அந்த உள்பக்கத்துக்கு போய் அந்த ஊக்க சக்தியையும் புத்திசாலித்தனத்தையும் பொறுக்கி எடுத்து அன்றாட வாழ்க்கைக்கு பயன்படுத்த வேண்டும்.

மனது ஒரு குரங்கு மாதிரி அலையுது என்கின்றோம். அதைக் கட்டுப்படுத்த முடியவில்லை என்கின்றோம். மனது அலைவது உண்மை தான். தேனீ எதற்காக அலைகிறது? தேனுக்காக அலைகிறது. அது மாதிரித் தான் மனதும் அலைகிறது. மகிழ்ச்சி, சாந்தி இவற்றைத் தேடி மனதை உள்ப்பக்கமாக அலைய விட வேண்டும்.

மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு என்னென்ன தேவை என்பதை அந்த யோகி சொல்கின்றார். ஊக்கம், புத்திசாலித்தனம்,அமைதி, சாந்தம். இது எல்லாம் எங்களிடமே எங்களுக்குள்ளேயே இருக்கிறது. அதனாலே தான் சொர்க்கம் நமக்குள்ளே இருக்கின்றது என்று சொல்வார். புதையலை நமக்குள்ளே வைத்துக் கொண்டு அதைத் தேடி புலம்பிக் கொண்டிருப்பது மிகவும வேடிக்கை என்கிறார் அவர். இதையெல்லாம் கேட்கும் போது உங்களிலே பல பேருக்கு கோபம் கூட வரலாம். என்ன சார் இது இன்று ஒரு தகவலிலே ஏதாவது உபயோகமாக சொல்வீர்கள் என்று பார்த்தால் என்னமோ தத்துவம் பேசிக் கொண்டிருக்கின்றீர்களே என்று நினைக்கலாம். இதுவும் உபயோகமான விடயம் தான்.

நாங்கள் தியானம் அது இது என்று ஒன்றுமே செய்வில்லை என்றால் கூட மனதிலே அழுத்தமோ இறுக்கமோ இல்லாது எப்போதும் சந்தோசமாக இருக்க பழகினால் போதும். ஏன் என்றால் மன இறுக்கத்தினாலேயே நிறைய நோய்கள் வருகின்றதாம். பெருவாரியான உடம்புக் கோளாறுகளுக்கு வாழ்க்கையின் விரக்தியாலேயும், தோல்விகளாலேயும் ஏற்படும் மனஇறுக்கம் தான் காரணம் என்பது மருத்துவ ஆராய்ச்சி முடிவு.

நான் இறுக்கம் இல்லாது இருப்பதற்கு தான் ஆசைப்படுகின்றேன். இந்த சமூகம் அதற்கு இடம் கொடுக்கவில்லை என்ன செய்வது என்பது பல பேருடைய கேள்வி. இந்த சமூகத்தை சரி செய்ய வேண்டியதும் நாங்கள் தான். நான் சரியாக இருக்கின்றேன் சமூகம் சரியாக இல்லை என அதை ஒதுக்கி பிரயோஜனம் இல்லை.

ஒரு குடுப்பஸ்தர். அவர் மனதிலே எப்போதும் டென்சன் இல்லாமலே இருக்கப் பழகிவிட்டார். அவர் சொல்லுவார். நான் என்றும் ஆழ்நிலைத் தியரனம் எல்லாம் செய்வதில்லை இருந்தாலும் என் மனது எப்போதும் அமைதியாகத் தான் இருக்கிறது. அவ்வளவுக்கும் என் வீட்டிலே தினமும் என் மனைவிக்கும் - என் அம்மாவுக்கும் சண்டை நடந்து கொண்டு தான் இருக்கிறது என்றார். அது சரி உங்கள் அம்மா ஒரு பக்கம் உங்கள் மனைவி ஒரு பக்கம் அவர்கள் இருவரும் சண்டை போடும் போது நீங்கள் எந்த பக்கம் இருப்பீர்கள் என்று கேட்டார் ஒருவர். அந்த சமயம் நான் வீட்டிற்கு வெளிப்பக்கம் இருப்பேன் என்றார் அவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய மதுபானசாலை அமைக்க இயக்கச்சியில் மக்கள் எதிர்ப்பு

**(தருமபுரம்)**

**கிளிநொச்சி மாவட்ட பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட இயக்கச்சிச் சந்தியில் புதிதாக மதுபானசாலை ஒன்று அமைக்கப்படவுள்ளமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து கிராம மக்கள் எதிர்ப்புக் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.**



குறித்த ஆர்ப்பாட்டமானது நேற்றுக் காலை 10 மணியளவில் இயக்கச்சிச் சந்தி ஏ9 வீதி அருகே இடம்பெற்றது.

குறித்த மதுபா னசாலை அமைய இருக்கும் இடத்திலிருந்து சுமார் 50 மீற்றர் தொலைவில் பாட சாலை அமைந்துள்ள தாகவும் எதிரில் கோவில், இயக்கச்சி பொதுச் சந்தை என அதிகளவில் பாடசாலை மாணவர்கள் மற்றும் பொது மக்கள் கூடுகின்ற இடமாகவுள்ளதால் இவ் இடத்தில் மதுபான சாலைக்கு அனுமதி வழங்கினால் மாணவர்கள் பொது மக்கள் அசௌகரியங்களுக்கு உள்ளாக நேரிடுவதுடன் பாடசாலை மாணவர்களுக்கான பாதுகாப்பும் கிடைக்கப் பெறாது என தெரிவித்து போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இயக்கச்சி பகுதியில் அமைந்துள்ள அனைத்து கடைகளும் போராட்டத்தின் போது கதவடைத்து தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்தனர்.

போராட்டத்தின் முடிவில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பளை பொலிஸ் பொறுப்பதிகாரி கடற்றொழில் அமைச்சர் மற்றும் பளை பிரதேச அமைப்பாளர் ஆகியோரிடமும் மகஜர் ஒன்று கையளித்தனர். (நி-6-316)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 400 | 300 | 250-300 | 300 |
| உருளைக்கிழங்கு | 180 | 240 | 200 | 190 | 220 |
| பச்சைமிளகாய் | 160 | 160 | 150 | 130 | 200 |
| தக்காளி | 800 | 650 | 650 | 600 | 700 |
| மரவள்ளிக்கிழங்கு | 140 | 160 | 140 | 100-120 | 200 |
| கோவா | 300 | 300 | 280 | 250 | 300 |
| கரட் | 300 | 600 | 650 | 400 | 600 |
| பூசணி | 50 | 180 | 180 | 150 | 200 |
| புடோல் | 160 | 250 | 200 | 200 | 300 |
| வாழைக்காய் | 160 | 200 | 150 | 150-170 | 200 |
| சின்ன வெங்காயம் | 350 | 400 | 400 | 300-500 | 400 |
| பெரிய வெங்காயம் | 250 | 260 | 200 | 230 | 240 |
| பாகற்காய் | 1500 | 800 | 1200 | 800 | 1300 |
| வெண்டக்காய் | 200 | 250 | 200 | 300 | 300 |
| கருணைக் கிழங்கு | 180 | 200 | 140 | 150 | 200 |
| பயற்றங்காய் | 250 | 300 | 200 | 200-250 | 300 |
| லீக்ஸ் | 600 | 500 | 550 | 350 | 600 |
| பீற்றூட் | 600 | 650 | 700 | 450 | 600 |
| கறிமிளகாய் | 800 | 800 | 750 | 400 | 800 |
| முருங்கைக்காய் | 1800 | 800 | 1000 | 400-600 | 1000 |
| போஞ்சி | 800 | 700 | 700 | 400 | 800 |
| கத்தரிதம்புள்ள | 200 | 300 | 300 | -- | 240 |
| கீரை - 1.பிடி | 50 | 100 | 40 | 50 | 60 |
| தேசிக்காய் | 800 | 1000 | 1000 | 700-800 | 1000 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 110 | 70 | 60-110 | 80-120 |
| இராசவள்ளி | 450 | 500 | 400 | 300 | 500 |
| வெங்காயப்பூ | 400 | 400 | 400 | -- | 400 |
| முள்ளங்கி | 140 | 200 | 200 | 300 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 90 | 120 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 40 | 100 | 80 | 80 |
| ஈரப்பலா | 150 | 150 | 100 | 100 | 120 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3157

**ஸ்ரீகாந்**




**ரித்திகா**




**தேனு**




**மதுஷன்**




**லோஜன்**




**பவி**




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 525





"ஆகா! பெரிய மரக்கலம் ஒன்று நிற்கிறதே! அது யாருடைய கப்பலோ என்னமோ! ஒரு வேளை பார்த்திபேந்திரனுடைய கப்பலாயிருக்கலாம். அப்படியிருக்குமானால், இந்த நிலையில் இளவரசரைக் காஞ்சிக்கு அழைத்துப் போவதே நல்லதல்லவா?"

"பழுவேட்டரையரின் கப்பலாகவும் இருக்கலாம், ஐயா! கப்பலுக்குப் பின்னால் ஏதாவது தெரிகிறதா!" "கோடிக்கரைக் கலங்கரை விளக்கின் உச்சி தெரிகிறது!" "அதில் ஏதாவது வித்தியாசமாய்க் காணப்படுகிறதா?"

"எனக்கு ஒன்றும் வித்தியாசமாய்த் தெரியவில்லையே."

"எனக்குத் தெரிகிறது. அதன் உச்சியில் கூட்டமாக மனிதர்கள் நின்று கடலை உற்றுப் பார்த்துக் கொண்டிருப்பதாகத் தோன்றுகிறது."

அங்கிருந்து பார்ப்பவர்களுக்கு இந்தப் படகு தெரியுமா? தெரியாது. இன்னும் கொஞ்சம் கரையை நெருங்கினால் தெரியும்."

"எல்லாவற்றுக்கும் நாம் முன் ஜாக்கிரதையாக இருப்பதே நல்லது. நீ முன்னம் சொன்னாயே, கோடிக்கரைக்கு மேற்கே கால்வாய் ஒன்று இருக்கிறதென்று? அங்கேயே படகை விடலாமா?"

"அப்படித்தான் செய்ய வேண்டும். இருட்டுகிற சமயத்துக்கு அங்கே போய்ச் சேரலாம். ஐயா! நீங்கள் ஒரு நாள் இருண்ட மண்டபத்தில் ஒளிந்திருந்தீர்களே? அதற்கு வெகு சமீபம் வரையில் அந்தக் கால்வாய் வருகிறது. இளவரசருடன் தாங்கள் சற்று நேரம் அங்கே தாமதித்தால் நான் போய் எல்லாவற்றையும் விசாரித்துக் கொண்டு விரைவில் வந்து சேருகிறேன்."

கால்வாய் அங்கேயே நின்று விடுகிறதா, பூங்குழலி! மேலும் எங்கேயாவது போகிறதா?

கோடிக்கரையிலிருந்து நாகைப்பட்டினம் வரையில் அந்தக் கால்வாய் போகிறது என்றாள் பூங்குழலி.

இந்தச் சமயத்தில் பொன்னியின் செல்வர் சுரவேகத்தில் தனக்குத்தானே பேசிக் கொண்டது கொஞ்சம் உரத்த சப்தத்துடன் கேட்டது.

ஆமாம். அக்கா, ஆமாம்! நாகைப்பட்டினத்துப் புத்த பிக்குக்கள் சொன்னதாகக் கூறினாயே? அதன்படியே நடந்தது. அநுராதபுரத்தில் புத்த பிக்குக்களின் மகா சங்கத்தார் எனக்கு இலங்கைச் சிங்காதனத்தையும், கிரீடத்தையும் அளிக்க முன் வந்தார்கள். நான்தான் மறுத்து விட்டேன், அக்கா! இராஜ்யத்தில் எனக்கு ஆசையில்லாதபடியால்தான் மறுதளித்தேன். நீ வேறு எது சொன்னாலும் கேட்கிறேன். இராஜ்யம் ஆளும் தொல்லை மட்டும் எனக்கு வேண்டாம்! அதைக் காட்டிலும் கடலில் படகு விட்டுக்கொண்டு எவ்வளவோ ஆனந்தமாயிருக்கலாம். கேள், அக்கா! கோடிக்கரையில் ஓடக்காரப் பெண் ஒருத்தி இருக்கிறாள்"

இதைக் கேட்ட பூங்குழலியின் உடம்பெல்லாம் புளங்காங்கிதமடைந்தது. வந்தியத்தேவனுக்கோ ஆத்திரம் வந்தது. மேலே என்ன சொல்லப் போகிறாரோ என்று கேட்க இருவரும் அடங்கா ஆர்வம் கொண்டிருந்தனர். ஆனால் திடீரென்று இந்த இடத்தில் இளவரசருக்குச் சுய உணர்வு கொஞ்சம் வந்ததாகத் தோன்றியது.

சுற்று முற்றும் விழித்துப் பார்த்துவிட்டு, "இன்னும் கோடிக்கரை வரவில்லையா?" என்று ஈன சுரத்தில் கேட்டார் இளவரசர்.

வந்தியத்தேவன், "அதோ கரை தெரிகிறது!" என்றான். இளவரசரிடம் யோசனை கேட்கலாமா, வேண்டாமா என்று அவன் யோசிப்பதற்குள் மீண்டும் இளவரசர் நினைவை இழந்து சுரப்பிராந்தி உலகத்துக்குப் போய் விட்டார். இளவரசர், கடைசியாக 'ஓடக்காரப்பெண்ணைப் பற்றிக் கூறிய வார்த்தைகள் பூங்குழலியின் மனத்தில் எண்ண அலைகளை எழுப்பி விட்டிருந்தன.

(தொடரும்...)



## சிறுவர் அரங்கம்

### சிங்கத்தை ஏமாற்றிய முயல்



ஒரு காட்டில் சிங்கம் ஒன்று வாழ்ந்து வந்தது. அது அங்கிருந்த பிராணிகளை தன் உணவுக்காக தொடர்ந்து வேட்டையாடியது. இதனால் காட்டில் உள்ள பிராணிகள் பயத்துடனேயே வாழ்ந்து வந்தன. நாளுக்கு நாள் சிங்கத்தின் தொல்லை அதிகரித்தது. அதனால் எல்லாப் பிராணிகளும் சேர்ந்து ஒரு முடிவுக்கு வந்தன. சிங்கத்திடம் சென்று, நீங்கள் சாப்பிடுவதற்காக எங்களில் ஒருவர் ஒவ்வொரு நாளும் உங்கள் இருப்பிடத்துக்கு அனுப்பிவைக்கப்படுவர். இனிமேல் வேட்டையாடுவதற்கு வெளியில் வர வேண்டிய அவசியம் இல்லை என்றது.

அதற்கு சிங்கமும் சரி என்றது.

முயல் செல்ல வேண்டிய முறை வந்தது. நண்பர்களே! எனக்கு சற்று அவகாசம் தாருங்கள். எனது தந்திரத்தால் நீங்களும் சிங்கத்தின் அநியாயத்திலிருந்து தப்ப வழி பிறக்கும். வருங்கால சந்ததிகள் காட்டில் நிம்மதியாக வாழ முடியும் என்றது.

பிறகு முயல் தாமதமாகச் சிங்கம் இருக்கும் இடத்திற்கு சென்றது. சிங்கம் முயலை நோக்கி அட அயோக்கிய பயலே, அறிவு கெட்டவனே ஏன் இவ்வளவு தாமதம்? என்று கேட்டது முயல், அரசே நான் வரும் வழியில் என்னை இன்னொரு சிங்கம் தாக்க வந்தது. அதனிடம் இருந்து நான் தப்பித்து வர தாமதமாகி விட்டது என்றது.

என்னைப்போல் ஒருவனா? இந்த காட்டிற்கு நான் மட்டும் தான் ராஜாவாக இருக்க வேண்டும். முதலில் அவனை அழித்தால் தான் நமக்கு தினமும் சரியாக உணவு கிடைக்கும் என்று சிங்கம் நினைத்தது. அதனால் புதிதாக காட்டுக்குள் வந்திருப்பவனை கொல்ல நினைத்து முயலிடம் அவன் இருக்கும் இடத்தைக் காட்டு, முதலில் அவனைக் கொன்று விட்டுப் பிறகு உன்னை சாப்பிடுகிறேன் என்றது.

முயல் தந்திரமாக சிங்கத்தை தூரத்தில் தெரியும் கிணற்றுக்கு அழைத்துச் சென்றது. இந்த கிணற்றில் தான் அந்த சிங்கம் பதுங்கியிருக்கிறது என்றது. சிங்கம் கிணற்றுக்குள் எட்டிப்பார்த்தது. அதில் சிங்கத்தின் முகம் தெரிந்தது.

அது தன்னுடைய முகம் தான் என்று அறியாத சிங்கம் தன்னுடைய எதிரி என்று நினைத்து அவனை அழிக்க நினைத்து கிணற்றுக்குள் குதித்தது.

சிங்கம் கிணற்றுக்குள் விழுந்த பின் முயல் மற்றப் பிராணிகளை நோக்கி சந்தோஷத்தால் துள்ளிக் குதித்து ஓடியது. சிங்கம் இறந்து போனது.

மற்றப் பிராணிகளிடம் சென்று நம்முடைய எதிரி அழிந்து விட்டான் என்று சந்தோசத்தில் கத்திச் சொன்னது. முயலின் இச்செய்தியைக் கேட்ட பிராணிகள் அனைத்தும் ஒன்று கூடி மகிழ்ச்சி ஆரவாரம் செய்தன. காட்டு மிருகங்கள் அனைத்தும் முயலுக்கு மரியாதை செய்தன. அனைத்து மிருகங்களும் நிம்மதியாக வாழ்ந்தன.

நீதி: கோபத்தில் எடுக்கும் முடிவு சரியாக இருக்காது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நம்மிடமுள்ள குறைகளை நீக்கிக்கொள்வதே நமக்கு ஏற்படக்கூடிய பெரிய அதிர்ஷ்டமாகும்.

– கதே

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தமிழ் அரசியல்வாதிகளே! அரசியலைக் காப்பாற்றுங்கள்

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட தலைவர் இரா.சம்பந்தன் காலமாகிவிட்டார் என்ற செய்தியோடு மட்டும் நாம் நின்றுவிட முடியாது.

மாறாக, தமிழர்களின் அரசியல் எதிர்காலம் பற்றி நாம் சிந்தித்தாக வேண்டும்.

பொதுவில் எங்கள் தமிழினத்தின் ஒற்றுமையீனமே எமது மிகப்பெரும் பலவீனமாக உள்ளது.

தமிழ் அரசியல் தரப்பில் ஒற்றுமை ஏற்படுவது தமிழ் இனத்துக்கு மிகவும் அவசியமானதென்பதைப் பலரும் சுட்டிக் காட்டியிருந்தனர்.

அண்மையில் தமிழ் அரசியல் தரப்புகளைச் சந்தித்த இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா; நீங்கள் ஒற்றுமைப் படுங்கள் எனக் கேட்டிருந்தார்.

ஆக, தமிழ் அரசியல் தரப்புகள் ஒற்றுமைப் படாத நிலையில், இனப் பிரச்சினைக்கான தீர்வு சாத்தியமாகாதென்பது அனைத்து சமூகத்தினரதும் நிலைப்பாடாகும்.

எனவே விரும்பியோ விரும்பாமலோ தமிழ் அரசியல் தரப்புகள் ஒற்றுமைப்பட்டாக வேண்டும்.

அதிலும் தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட தலைவர் இரா.சம்பந்தன் இயற்கை எய்தியிருக்கின்ற நிலையில் நாம் ஒற்றுமைப்படத் தவறுவோமாயின், அது தமிழ் மக்களுக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும்.

தவிர, தமிழ் அரசியல் தரப்புகள் ஒற்றுமைப்படத் தவறுமாயின் அது தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல, தமிழ் அரசியல் தரப்புகளின் இருப்பையும் கேள்விக்குறியாக்கும் என்பதை சம்பந்தப்பட்டவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

உண்மை. தந்தை செல்வநாயகம் அவர்கள் இயற்கை எய்தியபோது தமிழ்த் தேசம் அழுதது. யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் அவரின் உடல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது.

அனைத்துப் பாடசாலை மாணவர்களும் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்துக்கு வந்து தந்தை செல்வாவுக்கு அஞ்சலி செலுத்தினர்.

பாடசாலைகள், பொது இடங்களில் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன. இதேபோல தமிழ் அரசியல் தலைவர்களான அ.அமிர்தலிங்கம், வெ.யோகேஸ்வரன் ஆகிய இருவரின் உடல்கள் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தபோது நிறைந்த மக்கள் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினர்.

அன்றைய சூழல் அச்சம் நிறைந்ததாக இருந்தபோதிலும் அமிர்தலிங்கத்தையும் யோகேஸ்வரனையும் தமிழ் மக்கள் மறக்காமல் அவர்களை நினைந்தேத்தினர்.

ஆனால் இப்போது இரா.சம்பந்தன் காலமாகிவிட்டார். இருந்தும் அது எந்தவகையிலும் தமிழ் மக்களிடம் எதிர்வினையாற்றவில்லை.

இஃது அவர் மீதான வெறுப்பை மட்டுமல்ல. தமிழ் அரசியல் கட்சிகள் மீதான வெறுப்பையும் சுட்டி நிற்கிறது.

ஆகவே இதனை தமிழ் அரசியல் கட்சிகள் சீர்தூக்கி ஆராய்ந்து தமிழர்களின் அரசியல் என்ற தலைமையை ஒற்றுமையின் மூலம் பலப்படுத்த முன்வர வேண்டும்.

இதைச் செய்யத் தவறுவோமாயின், இன்றைய தமிழ் அரசியல்வாதிகளின் எதிர்காலமும் வெறுமையானதாகவே இருக்கும்.

### பெண்களுக்கு விசேட கடன்

## ரூ. 2 பில்லியன் ஒதுக்க அமைச்சரவை அங்கீகாரம்

பெண்கள் பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு உள்ள தடைகளை நீக்கும் வகையில் விசேட கடன்திட்டத்தைநடைமுறைப் படுத்துவதற்கு 2 பில்லியன் ரூபா ஒதுக்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அரசாங்கத்தின் கூற்றுப்படி, இலங்கையின் பொருளாதார விவகாரங்களில் பெண்களின் பங்களிப்பு ஏனைய பிராந்திய மற்றும் ஆசிய நாடுகளை விட குறைந்த மட்டத்தில் காணப்படுகின்றது.

2022 ஆம் ஆண்டு இலங்கையின் பணியாளர்களின் கணக்கெடுப் பின்படி, பொருளாதார ரீதியாக சுறுசுறுப்பான சனத்தொகையில் முப்பத்தைந்து வீதமானவர்கள் பெண்கள் ஆவர். இது பொருளாதார பங்கேற்பின் பாலின பங்களிப்பு விகிதங்களில் குறிப்பிடத்தக்க ஏற்றத்தாழ்வைக் காட்டுகிறது.

பெண்களின் வரையறுக்கப்பட்ட நிதி, கல்வியறிவு மற்றும் கடன் பெறுவதற்கு தேவையான சொத்து அல்லது பாதுகாப்பு இல்லாமை போன்ற காரணங்களால் நிதி ஆதாரங்களை அணுகுவதற்கான வாய்ப்புகள் குறைவாகவே உள்ளன.

இலங்கையில் பெண் தொழில் முயற்சியாளர்கள் எதிர்கொள்ளும் பிரதான தடைகளாக இவை இனங்காணப்பட்டுள்ளதாக அரசாங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

பெப்ரவரி 2024 இல் அமைச்சரவையின் முடிவின் படி,நிறுவனத் துறையை மீண்டும் வலுப்படுத்தும் முதலீட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்த ரூ 2 பில்லியன்ஒதுக்கப்பட்டுள்ளது.

எனவே பெண்கள் பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு உள்ள தடைகளை நீக்கும் வகையில் விசேட கடன் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு ஜனாதிபதியால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ம-7,10)

### ஜூன் மாதத்தில்

## 1,13,470 சுற்றுலாப் பயணிகள் இலங்கை வருகை

(கொழும்பு)

இவ்வருடத்தின் ஜூன் மாதத்தில் 113,470 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

அதன்படி, இவ்வருடத்தின் இதுவரையான காலப் பகுதிக்குள் 1,010,249 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

கடந்த ஜூன் மாதத்தில் அதிகளவான சுற்றுலாப் பயணிகள் இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள நிலையில் அவர்களின் மொத்த எண்ணிக்கை 28,631 ஆகும்.

மேலும், பிரித்தானியாவிலிருந்து 9,266 சுற்றுலாப் பயணிகளும் சீனாவிலிருந்து 8,575 சுற்றுலாப் பயணிகளும் அவுஸ்திரேலியாவிலிருந்து 6,317 சுற்றுலாப் பயணிகளும் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர். (ம-7,10)

## வெடிகுண்டு இருப்பதாக பொலிஸாருக்கு அழைப்பு

### சந்தேகநபர் கைது

கண்டி நீதிமன்ற வளாகத்தில் வெடிகுண்டு இருப்பதாக 119 பொலிஸ் அவசர அழைப்புப் பிரிவுக்கு அழைப்பு விடுத்த நபரை கினிகத்தேன பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கண்டி பொலிஸார் கினிகத்தேன பொலிஸாருக்கு வழங்கிய தகவலின் அடிப்படையில் குறித்த தொலைபேசி இலக்கத்தின் உரிமையாளரான 53 வயதான ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் கைது செய்யப்படும் போது குறித்த தொலைபேசி தன்னிடம் இருக்கவில்லை எனவும் நேற்று முன்தினம் பிற்பகல் குறித்த தொலைபேசி காணாமல் போயுள்ளதாகவும் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் தனியார் பஸ் நடத்துனராக கடமையாற்றியவர் எனவும், அவரிடம் மேலதிக விசாரணைகள் நடத்தப்படும் எனவும் பிரதான பொலிஸ் பரிசோதகர் விராஜ் விதானகே தெரிவித்தார்.

இதேவேளை நேற்று கண்டி நீதிமன்ற வளாகத்தில் வெடிகுண்டு இருப்பதாக தகவல் வெளியானதையடுத்து, அங்கு விசேட பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், வழக்குகளின் விசாரணையை நிறுத்தி, நீதிமன்ற வளாகத்தில் இருந்து மக்களை வெளியேற்ற பாதுகாப்புப் படையினர் நடவடிக்கை எடுத்தனர். அத்துடன் வெடிகுண்டு செயலிழப்பு பிரிவு, இராணுவம் மற்றும் பொலிஸார் இணைந்து இது தொடர்பான தேடுதல் பணியை மேற்கொண்டிருந்தனர். இதன் காரணமாக கண்டி நீதிமன்றத்தின் நடவடிக்கைகள் எதிர் வரும் ஜூலை மாதம் 16ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (ம-7,10)

## வடக்கில் வசிக்கும் இந்திய பிரஜைகளுக்கான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களில் வசிக்கும் மற்றும் பணிபுரியும் இந்திய பிரஜைகள் எதிர்நோக்கும் ஏதேனும் கடவுச்சீட்டு, தூதரக விவகாரங்கள் அல்லது அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை பூர்த்தி செய்யும் நோக்கில், இல. 14, மருதடி லேன், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள இந்திய துணைத் தூதரகத்தில் ஒவ்வொரு புதன்கிழமையும் 10.00 முதல் 11.00 மணி வரை ஓப்பின் ஹவுஸ் கூட்டம் நடைபெறவுள்ளது.

இந்த மாவட்டங்களில் உள்ள இந்திய குடிமக்கள் மேற்படி கூட்டங்களில் கலந்து கொள்ள அழைக்கப்படுகிறார்கள்.

அதேபோன்று, இந்த மாவட்டங்களில் வசிக்கும் இலங்கைப் பிரஜைகளின் விசா, OCI & தூதரக சேவைகள் போன்ற PCC, சான்றொப்பம் போன்றவை தொடர்பான குறைகள்/ வேண்டுகைகள் போன்றவை இந்த கூட்டங்களின் போது பூர்த்தி செய்யப்படும்.

உங்கள் பங்கேற்பை உறுதிப்படுத்த, தயவுசெய்து முன்கூட்டியே எம்மை தொடர்பு கொள்வதற்கு தொலைபேசி எண். 021-2220504/5 என்ற இலக்கத்தில் தொடர்பு கொள்ளவும். அல்லது cons.jaffna@mea.gov.in என்ற மின்னஞ்சல் மூலம் தொடர்பு கொள்ளவும் என யாழ்ப்பாண இந்திய துணைத்தூதரகம் அறிவித்துள்ளது. (ம-7,10)

## வழக்கு முடியும்வரை கெஹெலியவுக்கு மறியல்

(கொழும்பு)

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவின் மனுவைப் பரிசீலிப்பது தொடர்பான தீர்மானம், எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி அறிவிக்கப்படும் என மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று அறிவித்துள்ளது.

தரமற்ற தடுப்பூசிகளைக் கொள்வனவு செய்தமை தொடர்பான வழக்கு விசாரணை முடியும் வரை முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவை விளக்கமறியலில் வைக்குமாறு மாளிகாகந்த நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

குறித்த உத்தரவை செல்லுபடியற்றதாக்கி உத்தரவிடக் கோரி அவர் மேன்முறையீட்டு நீதிமன்றில் இந்த மனுவை அவர் தாக்கல் செய்திருந்தார். (ம-7,10)

## மோ.சைக்கிள் விபத்து இஸ்ரேல் பிரஜை மரணம்

(கொழும்பு)

பொத்துவில் - அக்கரைப்பற்று வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் சிக்கி இஸ்ரேலிய பிரஜை ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்தானது நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது, 23 வயதான இஸ்ரேலிய பிரஜை ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்து தொடர்பில் மேலும் தெரியவருகையில், பொத்துவில் நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிள் அதே திசையில் பயணித்த உழவு இயந்திரத்தின் பின்புறத்தில் மோதியுள்ளது.

இதன்போது, மோட்டார் சைக்கிள் ஓட்டுநரான இஸ்ரேலிய பிரஜை படுகாயமடைந்த நிலையில் பொத்துவில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

இந்நிலையில், விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பொத்துவில் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பங்களாதேஷ் உருவான கதையும் அந் நாட்டின் தேர்தல்களும் - ஒரு பார்வை

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

08

தேர்தல் நடத்தப்படாமல் முஜிப் பிரதமராக ஆனார். மார்ச் 7. 1973 இல் புதிதாக சுதந்திரம் பெற்ற பங்களாதேஷில் பொதுத் தேர்தல்கள் நடத்தப்பட்டன. இதன் விளைவாக பங்களாதேசம் அவாமி லீக் 300 இடங்களில் 293 இடங்களை வென்றது, பதினொரு தொகுதிகளில் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டனர். வாக்குப்பதிவு 55% ஆக இருந்தது. பெண்களுக்கு 15 இடங்கள் ஒதுக்கப்பட்டன. மொத்தமாக பாராளுமன்றத்தில் 315 உறுப்பினர்கள் இருந்தார்கள்.

### 1974 பங்களாதேஷ ஜனாதிபதி தேர்தல்

முதல் மறைமுக ஜனாதிபதி தேர்தல் 24 ஜனவரி 1974 அன்று நடைபெற்றது. ஜனவரி 1975 இல் ஜனாதிபதி முறை அறிமுகப்படுத்தப்படுவதற்கு முன்னர் பாராளுமன்ற முறையின் கீழ் இதுவே முதல் மற்றும் கடைசி ஜனாதிபதித் தேர்தல் ஆகும். வேறு வேட்பாளர்கள் யாரும் இல்லாததால் எந்த வாக்கெடுப்பும் இல்லாமல் தேசிய சட்டமன்றத்தால் முகமது முகமதுல்லா ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டார். முகமது முகமதுல்லா 27 ஜனவரி 1974 அன்று பங்கபாபனில் பதவியேற்றார். 1973 மற்றும் 1974 காலப்பகுதியில், நாடளாவிய ரீதியில் பஞ்சம் ஏற்பட்டது.

### நாட்டில் அவசரநிலை பிரகடனம் -1974

உள்நாட்டு பொருளாதார சீர்கேடுகளை களைய மற்றும் உள்நாட்டு கிளர்ச்சிகளை ஒடுக்க டிசெம்பர் 1974 அன்று, நாட்டில் அவசர நிலை பிரகடனம் செய்யப்பட்டது. மேலும் பாராளுமன்றம் மற்றும் நீதித்துறையின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டது. ஒரு கட்சி ஆட்சி முறை அறிமுகப்படுத்தப்பட்டது.

பங்களாதேசம் கிரிஷாக் ஸ்ராமிக் அவாமி லீக் என்ற கட்சி தொடக்கப்பட்டது. அக்கட்சியில் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்கள், குடிமைப் பணி மற்றும் இராணுவத்தின் உயர் அதிகாரிகள் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டனர். எனவே அவாமி லீக் கட்சி உட்பட அனைத்து அரசியல் கட்சிகள் இயங்கத் தடை செய்யப்பட்டது.

### சேக் முஜிபுர் ரகுமான் சுட்டுக்கொலை

15 ஓகஸ்ட் 1975 அன்று இடைநிலை இராணுவ அதிகாரிகள், சேக் முஜிபுர் ரகுமானையும், அவரது குடும்பத்தவர்களையும் சுட்டுக் கொன்றது. அவரது மகள்கள், சேக் ஹசினா மற்றும் சேக் ரஹானா வெளி நாட்டில் இருந்ததால் உயிர் தப்பினர். சேக் முஜிபுர் ரகுமானின் அரசியல் தோழர் முஸ்தாக் அகமது புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார். எனினும் முஜிபின் அமைச்சரவையில் பெரிய மாறுதல்கள் ஏற்படவில்லை.

நவம்பர் 3 மற்றும் நவம்பர் 7, 1975 ஆகிய இருதினங்களில் நடைபெற்ற ராணுவக் கிளர்ச்சிகளைத் தொடர்ந்து, நாட்டின் அதிகாரக் கட்டமைப்பு மாற்றியமைக்கப்பட்டது. சட்டம் மற்றும் ஒழுங்கை காப்பதற்காக அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டது. முஷ்டாக் பதவி விலகியதுடன் நாட்டில் ராணுவ ஆட்சி அமுலாக்கப்பட்டது.

புதிய ஜனாதிபதியாக முதன்மை ராணுவ நிர்வாகியும், நீதிபதியுமாகிய அபு சதம் பதவியேற்றார். இவரது பதில் நிர்வாகிகளாக மூன்று முதன்மை சேவை அதிகாரிகள் செயற்பட்டனர். 1977இல் நீதிபதி சாயெம் பதவி விலகியதைத் தொடர்ந்து, லெப்டினன்ட் ஜெனரல் சியாவுர் ரகுமான் ஜனாதிபதியாகப் பதவியேற்றார்.

### 1977 பங்களாதேஷம் ஜனாதிபதி நம்பிக்கை வாக்கெடுப்பு

ஜனாதிபதி சியாவுர் ரகுமான் மீதான நம்பிக்கை வாக்கெடுப்பு பங்களாதேஷில் 30 மே 1977 அன்று நடைபெற்றது. வாக்காளர்களிடம், "ஜனாதிபதி மேஜர் ஜெனரல் சியாவுர் ரகுமான் மற்றும் அவர் ஏற்றுக்கொண்ட கொள்கைகள் மற்றும் திட்டங்கள் மீது உங்களுக்கு நம்பிக்கை இருக்கிறதா? என்று கேட்டு மக்கள் கணிப்புத் தேர்தல் நடத்தப்பட்டது. 88.1% வாக்காளர்கள் வாக்களித்தனர். அதில் ஆம் என 98.9% வாக்களித்தனர்.

இவர் பலகட்சி அரசியலை மீண்டும் கொண்டுவந்ததோடு, திறந்த சந்தைப் பொருளாதாரத்தையும் அறிமுகப்படுத்தினார். மேலும் பங்களாதேசம் தேசியக் கட்சி எனும் கட்சியையும் உருவாக்கினார். 1981இல் இராணுவத்தின் ஒரு பிரிவினரால் சியாவுர் ரகுமான் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து அவரது ஆட்சி முடிவுக்கு வந்தது.

மே 1981 இல் ஜனாதிபதி சியாவுர் ரகுமான் படுகொலையைத் தொடர்ந்து துணை ஜனாதிபதி அப்துஸ் சத்தார் அந்த நேரத்தில் மருத்துவமனையில் இருந்த போதிலும் தானாகவே பங்களாதேஷின் தற்காலிக ஜனாதிபதியானார்.

ஜூன் 4 அன்று பங்கபாபனில் வெளிநாட்டு செய்தியாளர்களிடம் பேசிய அப்துஸ் சத்தார், "நாட்டில் ஜனநாயக செயல்முறையை சீர்குலைக்கும் எந்தவொரு சதியையும் முறியடிக்க, அரசியலமைப்பின்படி, முன்னாள் ஜனாதிபதி இறந்த 180 நாட்களுக்குள் தேர்தல் நடத்தப்படும்" என்று அறிவித்தார்.

### 1979 பங்களாதேசம் பொதுத் தேர்தல்

பங்காளதேசத்தில் 18 பிப்ரவரி 1979 அன்று பொதுத் தேர்தல்கள் நடத்தப்பட்டன. இதன் விளைவாக 300 இடங்களில் 207 இடங்களை பங்களாதேஷ் தேசியவாதக் கட்சி வெற்றி பெற்றது. வாக்குப்பதிவு 51.3%. அவாமி லீக் 39 இடங்களில் வெற்றி பெற்று பிரதான எதிர்க் கட்சியாக உருவெடுத்தது. 30 இடங்கள் கூடுதலாக பெண்களுக்கு மட்டும் ஒதுக்கப்பட்டன. இவர்கள் பாராளுமன்றத்தினாலேயே தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

ஏறக்குறைய அனைத்து கட்சிகளும் பங்கேற்றதால், தேர்தல்கள் பார்வையாளர்களால் நம்பகத்தன்மை வாய்ந்ததாக கருதப்பட்டது.

### 1981 பங்களாதேசம் ஜனாதிபதி தேர்தல்

பங்களாதேஷில் 15 நவம்பர் 1981 அன்று ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றது. இதன் விளைவாக, பங்களாதேச தேசியவாதக் கட்சியின் (BNP) அப்போதைய செயல் தலைவர் அப்துஸ் சத்தார் வெற்றி பெற்றார், அவர் அளிக்கப்பட்ட வாக்குகளில் 65.5% வாக்குகளைப் பெற்று அவாமி லீக்கின் கமல் ஹொசைனைத் தோற்கடித்தார். வாக்குப்பதிவு 56.5% ஆக இருந்தது.

### 1982இல் ஏற்பட்ட புரட்சி

மார்ச் 24, 1982இல் ஏற்பட்ட புரட்சியைத் தொடர்ந்து பங்களாதேஷத்தின் அடுத்த ஆட்சியாளராக லெப்டினன்ட் ஜெனரல்/ஹசைன் முகமது எர்சாத் பதவியேற்றார்.

### 1985 பங்காளதேஷ இராணுவ ஆட்சிக்கு மக்கள் கணிப்பு (பொது) வாக்கெடுப்பு

1982 இல் இராணுவத் தளபதி /ஹசைன் முஹம்மது எர்சாத் தலைமையிலான ஒரு சதிப்புரட்சி ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதி அப்துஸ் சத்தாரை அகற்றியது. அரசியலமைப்பை இடைநிறுத்தியது மற்றும் இராணுவச் சட்டத்தை விதித்தது. பாராளுமன்றம் கலைக்கப்பட்டு அனைத்து அரசியல் கட்சிகளும் தடை செய்யப்பட்டன.

எர்சாத் 27 மார்ச் 1982 அன்று நீதிபதி ஏ.எஃப்.எம். அஹ்சானுதீன் சௌத்ரியை (பொம்மை) ஜனாதிபதியாக நியமித்தார். அவர் டிசம்பர் 1983 வரை பதவியில் இருந்தார். அதன்பின் எர்சாத் அவர்களே ஜனாதிபதியாக பதவியேற்றார். 1983 இல் எர்சாத் மே 1984 இல் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதாகவும் அடுத்த ஆண்டு பாராளுமன்ற அரசாங்கத்தை மீட்டெடுப்பதாகவும் உறுதியளித்தார். ஆனால், குறிப்பிட்ட காலத்திற்குள் எந்தத் தேர்தலும் நடத்தப்படவில்லை.

பொது மக்களின் எதிர்ப்பு அதிகரித்து வரும் நிலையில், மார்ச் 1985 இல் ஒரு வாக்கெடுப்பு நடத்தி தனது ஆட்சியை சட்டப்பூர்வமாக்குவதை எர்ஷாத் நோக்கமாகக் கொண்டார்.

1982 ஆம் ஆண்டு அதிகாரத்தைக் கைப்பற்றிய இராணுவத் தளபதி ஹசைன் முகமது எர்சாத்தின் இராணுவ ஆட்சியை உறுதி செய்வதற்காக வங்காளதேசத்தில் 21 மார்ச் 1985 அன்று இராணுவ ஆட்சிக்கான வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

இந்த வாக்கெடுப்பில் வாக்காளர்களிடம் "ஜனாதிபதி" எர்சாத்தின் கொள்கைகளை நீங்கள் ஆதரிக்கிறீர்களா? , மற்றும் தேர்தல் மூலம் சிவில் அரசாங்கம் அமைக்கப்படும் வரை அவர் இந்த நிர்வாகத்தை தொடர்ந்து நடத்த விரும்புகிறீர்களா?" என்று கேள்வியுடன் மக்கள் கணிப்பு நடத்தப்பட்டது. பொது வாக்கெடுப்பு நாளில் எதிர்க்கட்சிகள் பொது வேலை நிறுத்தத்திற்கு ஏற்பாடு செய்தன.

வாக்கெடுப்பின் உத்தியோகபூர்வ முடிவு அவரது ஆட்சிக்கு ஆதரவாக இருந்தது, அதற்கு ஆதரவாக அளிக்கப்பட்ட வாக்குகளில் 94.5% வாக்குகள் கிடைத்தன. அளிக்கப்பட்ட வாக்குகள் 72.2% ஆகும். ஆனால், பெரிய அளவில் வாக்குகளில் முறைகேடு நடந்ததாக புகார் எழுந்தது.

பல உள்ளூர் மற்றும் வெளிநாட்டு பார்வையாளர்கள் இந்த எண்ணிக்கையை உயர்த்தியதைக் கண்டறிந்தனர் மற்றும் வாக்குப்பதிவு 15 முதல் 20 சதவீதத்திற்கு மேல் இல்லை என்றும் கூறியது.

ஜனவரி 1, 1986 அன்று எர்சாத் தேர்தலில் தனது நலன்களை பிரதிநிதித்துவப்படுத்த ஜாதியா கட்சியை உருவாக்கினார்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லிட்ரோ...

இதன்படி, 12.5 கிலோ கிராம் எரிவாயு சிலிண்டர் 100 ரூபாயினால் குறைக்கப்படவுள்ள நிலையில், அதன் புதிய விலை 3,690 ரூபாயாகும்.

5 கிலோ கிராம் எடையுள்ள எரிவாயு சிலிண்டரின் விலை 40 ரூபாயால் குறைக்கப்படவுள்ளதுடன், அதன் புதிய விலை 1,482 ரூபாயாகும்.

2.3 கிலோ கிராம் எடையுள்ள எரிவாயு சிலிண்டரின் விலை 18 ரூபாயால் குறைக்கப்படவுள்ளதுடன், அதன் புதிய விலை 694 ரூபாயாகும். (ம-7,10)

## முரல் மீன்...

பிடியில் ஈடுபட்டிருந்த வேளை முரல் மீன் இளைஞனின் கழுத்தைத் தாக்கியதில் இளைஞன் உயிரிழந்துள்ளதாக ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது

இளைஞனின் சடலம் உடற்கூற்று பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில், யாழ்ப்பாணப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7,10,33)

## முல்லையில் வீடு...

குள் வாள்களுடன் நுழைந்த குழுவினர் குறித்த வீட்டில் இருந்த இருவர் மீது வாள்வெட்டு தாக்குதல்களை மேற்கொண்டுள்ளனர்.

இதில் படுகாயமடைந்த இருவரும் மல்லாவி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மல்லாவி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,10)

## போலி நாணயத்...

னர்.

இதன் காரணமாக மேற்குறிப்பிட்ட பகுதிகளில் விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு, சந்தேக நபர்களை கைது செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது.

எனவே, போலி நாணயத்தாள்கள் தொடர்பில் ஏதேனும் தகவல் கிடைத்தால் அருகில் உள்ள பொலிஸ் நிலையங்களில் தெரிவிக்குமாறு பொலிஸார் பொதுமக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளனர். (ம-7,10)

## முல்லையில்...

சேர்ந்த சுப்பையா சிறிதரன் (வயது-41) என்ற குடும்பஸ்தரே உயிரிழந்தவராவார்.

முல்லைத்தீவு மாங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஏ9 வீதியின் கிழவன் குளம் பகுதியில் கடந்த 28ஆம் திகதி பிற்பகல் ஒரு மணியளவில் டிப்பர் வாகனம் ஒன்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் மோதி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தின்போது மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்தநிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

விபத்துத் தொடர்பான விசாரணைகளை மாங்குளம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,10,315)

## கடன் மறுசீரமைப்...

களுக்கு கருத்துரைக்கையிலேயே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

நாட்டில் கடந்த காலங்களில் பாரிய பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது. நெருக்கடி நிலையில் இருந்து மீள்வதற்கு கடந்த 16 சந்தர்ப்பங்களில் சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை நாடியிருந்த போதிலும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஒப்பந்தம் தொடர்பான அறிக்கை பாராளுமன்றில் முன்வைக்கப்படவில்லை.

நாடு பெற்றுக்கொண்ட கடனை மீளச்செலுத்தாமையினாலேயே கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் பாரிய பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது.

எமது நாட்டை பொறுத்தவரையில் நூற்றுக்கு 75 வீத ஏற்றுமதி, இறக்குமதி சார்ந்த வர்த்தக முறைமை காணப்படுகின்றது.

ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகம் இரண்டு வாரங்களுக்கு ஸ்தம்பிதமடைந்தால் முழு வர்த்தகமும் முடங்கும் நிலை ஏற்படும். எனவே கடன் மறு சீரமைப்பின் ஊடாக மீண்டும் சர்வதேசத்தில் இலங்கையின் நம்பிக்கை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

உலக நாடுகளுடன் நம்பிக்கையுடன் பொருளாதார வேலைத்திட்டங்களை முன்னெடுத்துச் செல்வதற்கான சூழ்நிலை ஏற்படும்.

இதன் பலாபலன்கள் நாட்டு மக்களைச் சென்றடையும். இலங்கையில் இடைநடுவில் கைவிடப்பட்ட வர்த்தக திட்டங்களை மீள ஆரம்பிக்க எதிர்பார்த்துள்ளதாக ஜப்பான் மற்றும் சீனா ஆகிய நாடுகள் அறிவித்துள்ளன இவ்வாறு ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார். (ம-7,10)

## மருந்துகளுக்கு...

விலையை நிர்ணயிப்பதற்கான செயன்முறை தயாரிப்புப் பணிகள் இதனூடாக இடம்பெறும்.

பன்முகத்தன்மை மற்றும் நியாயமான முறையில் இந்த விலை நிர்ணயத்திற்கான செயன்முறைகளை தயாரிக்கும் வகையில் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் வைத்தியர் ரமேஷ் பத்திரன தெரிவித்துள்ளார். (ம-7,10)

## உத்தர...

கட்டுக்கடங்காத நிலையில் அந்த சடங்கில் ஏற்பட்ட நெரிசலில் சிக்கி பெண்கள், குழந்தைகள் என 125 பேர் உயிரிழந்துள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

உத்தர பிரதேச மாநிலம் ஹத்ராஸ் மாவட்டத்தில் உள்ள புல்ராய் கிராமத்தில் நேற்று இடம்பெற்ற இந்து மத சத்சங்கம் நிகழ்ச்சியிலேயே இந்த துயரச் சம்பவம் இடம்பெற்றது.

நிகழ்ச்சி முடிந்து மக்கள் புறப்பட்டபோது கடும் நெரிசல் ஏற்பட்டது. ஒருவரையொருவர் முண்டியடித்து சென்றபோது பலர் கீழே விழுந்தனர். நெரிசலில் சிக்கி 23 பெண்கள், 3 குழந்தைகள், ஒரு ஆண் என 27 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

மேலும் ஏராளமானோர் பலத்த காயமடைந்தனர். அவர்கள் உடனடியாக மருத்துவமனைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். மருத்துவ மனையில் சிகிச்சை பலனின்றி அடுத்தடுத்து பலர் உயிரிழந்தனர்.

இதனால் நேற்றிரவு நிலை வரப்படி பலி எண்ணிக்கை 125 ஆக உயர்ந்துள்ளது. மேலும் சிலருக்கு தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. (ம-7,10)

லங்கா மஹால் (PVT) LTD
DHL உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை
அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும்.
இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.
இந்தியா தொடர்புகளுக்கு: 00919566156719
Western Union · MoneyGram · Ria
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு.
077 839 3974

மஹஜன சம்பத
திகதி 2024.07.02
சீட்டிழுப்பு இலக்கம் 5522
A 7 4 8 0 7 9
அத சம்பத
A 8 0 7 9
சீட்டிழுப்பு இலக்கம் 0097

தன நிதானய
திகதி - 2024.07.02
சீட்டிழுப்பு இலக்கம் - 1552
I 34 56 71 81 I
77685

மெகா பவர்
திகதி 02/07/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1870
L 13 03 19 38 46
84425

லக்கி 7 VIP
திகதி 2024.07.02
சீட்டிழுப்பு இலக்கம் 348
R 3 9 1 8 0 7 R

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3764
சீட்டிழுப்பு திகதி 02.07.2024
E 11 18 35 71
E 28475

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.07.02
சீட்டிழுப்பு இலக்கம் 0831
கன்னி 39 41 49 51 கன்னி
33299 04

உத்தியோகபூர்வ முடிவுகள்
02.07.2024 வெற்றி வாரம் 230 வர்ணம் சிவப்பு
W 7 2 2 8 0 5
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.20,804,612.00
32096

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2496 வர்ணம் வெளிர் நீலம்
சீட்டிழுப்பு திகதி 02.07.2024 தினம் செவ்வாய்
28 34 36 40 K
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 96,560,241.60

சனிதா
திகதி 2024.07.02 வெற்றி வாரம் 4657 வர்ணம் பச்சை
23 36 39 57 K
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 63,860,732.40
61714

சசிரி
497 2024.07.02
10 27 46
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,937,360/-

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4208 வர்ணம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2024.07.02 தினம் செவ்வாய்க்கிழமை
15 22 24 45
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 8,682,271.20
270618

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
L 30 03 05 48 68
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 529,579,413.00
1672 02.07.2024 செவ்வாய்

அட கோடிபதி ADA KOTIPATHI
செவ்வாய்க்கிழமை 2322 2024.07.02
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 124,650,310.40
02 22 23 40 L
553195

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொதுமக்களின் பாதுகாப்பு

# நாடு முழுவதும் ஆயுதப் படைகளை களமிறக்க உத்தரவு பிறப்பிப்பு

(கொழும்பு)

பொதுமக்களின் பாதுகாப்பிற்காக நாடு முழுவதும் ஆயுதப் படைகளை வரவழைக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உத்தரவு பிறப்பித்துள்ளதாக சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று குறித்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

நாற்பதாவது அதிகாரமாக இருந்த பொதுப் பாதுகாப்புச் சட்டத்தின் 12ஆவது பிரிவின் கீழ் அவருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார் என சபாநாயகர் கூறியுள்ளார்.

மேலும், பொருளாதார உருமாற்ற சட்டமூலத்தின் பல சரத்துகள் அரசியலமைப்பிற்கு முரணானது என உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளதாக சபாநாயகர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதன்படி, சட்டமூலம் பாராளுமன்றத்தின் சிறப்பு பெரும்பான்மையால் மட்டுமே நிறைவேற்றப்பட வேண்டும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாக சபாநாயகர் தெரிவித்துள்ளார்.

எனினும் அந்த சரத்துகள் திருத்தப்பட்டால் தனிப் பெரும்பான்மையுடன் நிறைவேற்ற முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

(ம-7,10)

# கொரிய யுவதியிடம் சேஷ்டை புரிந்தவர் கைது

(நுவரெலியா)

கொரியா நாட்டிலிருந்து இலங்கைக்குச் சுற்றுலாப் பயணத்தை மேற்கொண்டு நுவரெலியாவுக்கு சென்ற இளம் யுவதியிடம் தகாத வகையில் சேஷ்டை செய்த இயந்திர படகு ஓட்டுநர் ஒருவரை விளக்கமறியலில் வைக்குமாறு நுவரெலியா மாவட்ட நீதவான் நீதிமன்றம் திங்கட்கிழமை (01) உத்தரவு பிறப்பித்துள்ளது.

குறித்த யுவதி கிறேகறி தெப்பக்குள பகுதிக்கு (30) மாலை அழகை ரசிக்க சென்று அங்கு குளத்தில் இயந்திர படகில் சவாரி செய்ய முற்பட்டுள்ளார்.

இந்த சமயத்தில் குளத்தில் படகு சேவையில் ஈட்டுப்பட்டிருந்த இளைஞர் குறித்த யுவதியிடம் சேஷ்டையில் ஈடுபட்டுள்ளார்.

இதனையடுத்து, யுவதி நுவரெலியா பொலிஸ் நிலையத்திற்குச் சென்று தனக்கு நேர்ந்தது தொடர்பில் முறையிட்டதையடுத்து, சுற்றுலாத்துறையை பொறுப்பான பொலிஸ் பிரிவினர் கிறேகறி குளத்திற்குச் சென்று சேஷ்டையில் ஈடுபட்ட இளைஞரைக் கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட இளைஞரை விசாரணைக்காக நுவரெலியா மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தியபோது, விசாரித்த நீதவான் பிரபுதிகா நாணயக்கார, சந்தேகநபரை எதிர்வரும் திங்கட்கிழமை (15) விளக்கமறியலில் வைக்க உத்தரவு பிறப்பித்துள்ளார்.

(ம-7,10)

# பெல்ஜியம் பிரஜை கட்டுநாயக்கவில் கைது

பணமோசடி செய்த குற்றச்சாட்டில் பெல்ஜிய பிரஜை ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த சந்தேகநபரை குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் கட்டுநாயக்க விமான நிலைய பிரிவினர் கைது செய்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் தெரிய வருகையில், குறித்த பெல்ஜியம் நாட்டவர் பல கட்டுமானப் பணிகளை மேற்கொள்வதற்காக ஒருவரிடமிருந்து 6 கோடியே 38 லட்சத்து 18ஆயிரத்து 452 ரூபாவை பெற்றுக்கொண்டுள்ளார்.

இந்த நிலையில், நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளாமல் பணத்தை முறைகேடாக பயன்படுத்தியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் 31 வயதான பெல்ஜியப் பிரஜை என தெரியவந்துள்ளது.

மேலும், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் கட்டுநாயக்க விமான நிலையப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.(ம-7,10)

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-0728)
076 825 7716 (ஆகாஸ்)

# லாஃப்ஸ் சமையல் எரிவாயு விலையில் மாற்றம் இல்லை


லாஃப்ஸ் சமையல் எரிவாயுவின் விலையில் திருத்தம் மேற்கொள்ளப்படாது என அந்த நிறுவனம் அறிவித்துள்ளது.

இதன்படி, 12.5 கிலோ கிராம் சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை 3,680 ரூபாவிற்கும், 5 கிலோ கிராம் சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை 1,477 ரூபாவிற்கும் 2 கிலோ கிராம் சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை 591 ரூபாவிற்கும் தொடர்ந்து விற்பனை செய்யப்படும்என அந்த நிறுவனம் அறிவித்துள்ளது.(ம-7,10)

# மரண அறிவித்தல்

## கதிர்காமு முருகப்பெருமான்

( யாழ்ப்பாணம் – காங்கேசன்துறை 769 வழித்தட நேரக்காப்பாளர் மற்றும் யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலைய பிரதான நேரக்காப்பாளர் (1990 – 1995 வரை)



பிறப்பு 30.06.1942 | இறப்பு 28.06.2024

"தமிழகம்" வேவரி, குரு வீதி, காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் இல.03, இடைக்கட்டு (செஞ்சோலை வளாக வீதி), வள்ளிபுனம், புதுக்குடியிருப்பை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த கதிர்காமு முருகப்பெருமான் அவர்கள் கடந்த 28.06.2024 வெள்ளிக்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிர்காமு - அம்மணி தம்பதியரின் பாசமிகு மகனும் ஆண்டி - தங்கப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் சரஸ்வதியின் அன்புக் கணவரும் அமரர் க.தெய்வரத்தினம்(தெய்வம்), க.மகாலிங்கம்(மகான்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் சந்திரிகா (சூட்டி), மதிவாணன், ஜனார்த்தன், மிதிலைச்செல்வி ஆகியோரின் பாசமிகு தந்தையும் செல்வகுமார் (ரமேஸ்), தயாக்கினி, சுகிந்தினி, சசிகரன்(குட்டி) ஆகியோரின் அன்பு மாமனாரும் கனியவள், கரிகாலன், எல்லாளன், ரூபிசா, பிரவஸ்தி, கவின், பிரபாகரன், பிரதீபன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் புகழுடல் இலக்கம் 03, இடைக்கட்டு (செஞ்சோலை வளாக வீதி), வள்ளிபுனம், புதுக்குடியிருப்பு என்ற முகவரியில் உள்ள வசிப்பிடத்தில் வைக்கப்பட்டுள்ளது.

அன்னாரின் இறுதிக்கிரியை நாளை வியாழக்கிழமை (04.07.2024) மாலை 3.00 மணிக்கு இடைக்கட்டு, வள்ளிபுனத்தில் உள்ள இல்லத்தில் இடம்பெற்று புகழுடல் மாலை 4 மணியளவில் வள்ளிபுனம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

மு.மதிவாணன் (மதி)
ஊடகவியலாளர் (சக்தி TV)
077 547 7638

தகவல்:
குடும்பத்தினர்

புதிய பிரிவுகள் ஆரம்பம்
கணக்காளர் கற்கை நெறிகள்
Chartered Accounting Courses
Business Level - I,II (06.07.2024)
தொழிற்துறைக் கணக்காளர் ஆவதற்கு
aat (Sri Lanka)
(AA1 - 06.07.2024)
G.C.E O/L பெறுபேற்றினை எதிர்பார்த்திருப்பவர்களும் கற்கலாம்,
(AA2, AA3 - 17.08.2024)
Certificate Course in English
Further Details : Jaffna College
Undergraduate Dept.
464, Hospital Road, Jaffna.
021 222 3382/ 021 222 9149
- 077 440 5917
(C-0718)

வங்கி மீதி வசதி
(Show money)
சகல நாடுகளுக்குமான விசாவினை உறுதிப்படுத்திக் கொள்ள குறைந்த கட்டணத்தில் வங்கி மீதி வசதிகள்
தொடர்புகளுக்கு:
074 17 37 684
(126)

மணமகன் தேவை
26.09.1985 நட்சத்திரம் சதயம் 1 பாதம் செவ்வாய் 8 இல் கிரக பாவம் 69 உள்ள இந்து சமயத்தைச் சேர்ந்த பெண்ணுக்கு மணமகன் தேவை.
தொடர்புகளுக்கு : (1378)
077 922 8969
077 625 8299

Care Giver - பராமரிப்பாளர்
கனடா, அமெரிக்கா, ஜேர்மனி
போன்ற நாடுகளில் வேலை வாய்ப்பினை பெறக்கூடிய கற்கை நெறி - 1 Year Diploma
கனடாவில் புதிதாக உள்வாங்கப்படவுள்ள நிரந்தரகுடியுரிமையுடனான 15'000 Care Giver வாய்ப்புக்களுக்கான சர்வதேச தரமிக்க Diploma சான்றிதழுடன் Care Giver கற்கை நெறி மற்றும் Immigration Services - வீசா சேவைகள்.
(இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்)
CIMS College
49A, Chapel Street,Jaffna.
(C-0727)
College Of International Migration Skills
0777 068 777 / 077 7719 322

வேலையாள் தேவை
வீட்டில் தங்கி நின்று பணிபுரிவதற்கு 45 வயதுக்கு மேற்பட்ட பெண் ஒருவர் தேவை.
தொடர்புகளுக்கு :
076 264 4237
(1374)

V2 VISA SERVICES
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-0727)

அனைத்து நாடுகளுக்குமான
விமான பயணச்சீட்டுக்கள்
குறைந்த விலையில்
•Air Ticket Date Change •Travel Insurance
•Online Visa Appoinments •Travel Itinerary
•Sri Lanka Visa Extension
•All Country Visa Services
உங்கள் அருகாமையில் எமது நேரடி கிளைகள்
கொழும்பு| மட்டக்களப்பு |திருகோணமலை|கிளிநொச்சி
புதுக்குடியிருப்பு |கொடிகாமம் |சாவகச்சேரி |புத்தூர்
யாழ்ப்பாணம் |நாச்சிமார் கோவிலடி |பண்டத்தரிப்பு
சுன்னாகம் |மானிப்பாய் |சங்கானை |கோப்பாய்
நெல்லியடி |பருத்தித்துறை |வல்வெட்டித்துறை
V2 TRAVELS 0768226240 0768226241
(C-0727)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, [illegible] யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.07.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.